Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மேவின்
ரெயிலறிங் அன் காமன்ஸ்
15 வருட காலமாக யாழ். குடாநாட்டில் அநேகரின் நன்மதிப்பைப் பெற்ற எமது ஸ்தாபனம் தொடர்ந்தும் சேவையாற்றி வருகிறது. அனைவரதும் விருப்பம் போல.
கல்யாண சூட் - சர்வாணி
நெஷனல் - சேட்
லோங்ஸ் - சோட்ஸ்
இலாஸ்டிக் சோட்ஸ்
போன்ற ஆண்களுக்கான சகல தையல் வேலைகளையும் பெற நாடுங்கள்
28, நவீன சந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம்.
(சி-075)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஷ∴பான் 26 (02.11.2002) சனிக்கிழமை இதழ் : 33



நேற்றைய பேச்சுக்களின் இடைநடுவே ஒன்றுகூடி உரையாடும் புலிகள் குழுவினர்

### புலிகள் - படைத்தளபதிகள் அடுத்தவாரம் சந்திப்பு

## உயர் பாதுகாப்பு வலய நீக்கம் ஆராய 16 பேர் கொண்ட குழு

### நேற்றைய பேச்சுக்களில் இருதரப்பும் இணக்கம்

(நொகன்பத்தமிலிருந்து விதுர்ஷன்)

உயர்பாதுகாப்பு வலயத்தை நீக்குவது குறித்து ஆராய்ந்து முடிவுகளை எடுக்கவென 16 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக - தாய்லாந்தில் நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இணக்கம் காணப்பட்டது. இதன்படி - இக்குழுவில் அரசுத் தரப்பு பிரதிநிதிகள எண்மரும் விடுதலைப் புலிகள் தரப்பில் எண்மரும் இடம்பெறுவர்.

எண்மர் கொண்ட புலிகள் தரப்பில் நால்வர் புலிகளின் களநிலைத் தளபதிகளாகவும் நால்வர் அரசியல் துறைப் பொறுப்பாளர்களாகவும் இடம் பெறுவர்.

இக்குழுவின் முதற்சந்திப்பு எதிர்வரும் 10 ஆம்திகதி ஓமந்தையில் இரு தரப்பினரினதும் கட்டுப்பாட்டிலில்லாத சூனியப்பகுதியில் நடைபெறும் எனத் தெரியவருகிறது.

# பிரபா மீதான நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு புலிகள் கடும் கண்டனமும் அதிர்ச்சியும்!

## தாய்லாந்தில் அரசாங்கக் குழுவினரிடம் தமிழ்ச்செல்வன் நேரடியாகத் தெரிவிப்பு!

(நொகன்பத்தமிலிருந்து நமது நிருபர் விதுர்ஷன்)

**விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீது, கொழும்பு மேல் நீதிமன்றினால் விதிக்கப்பட்ட 200 வருட சிறைத்தண்டனைத் தீர்ப்புக்குப் புலிகளின் கடுமையான கண்டனத்தையும் அதிர்ச்சியையும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - தாய்லாந்துப் பேச்சுக்களில் பங்குபற்றும் அரச தரப்பினரிடம் நேரடியாகத் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பாக அவர் பேச்சுக்கள் நடைபெறும் நொகன்பத்தமிலிருந்து தெரிவித்திருப்பதாவது -

எமது தலைவருக்கு எதிராக விதிக்கப்பட்ட தீர்ப்புத் தொடர்பாக நேற்றைய பேச்சுக்கள் நடக்கும் போது எமது அதிருப்தியை தெரிவித்தோம். பேச்சுக்கள் 2ம் கட்டத்திற்கு நகர்ந்துள்ள சூழலில் இப்படியான தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பது நாம் உருவாக்கி வரும் சமாதான நல்லெண்ணச் சூழ்நிலையை சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே இதை நாம் பார்க்கிறோம். தலைவர் மீதான தீர்ப்பை பாரதூரமாகவே நாம் கருதுகிறோம்.

சமாதான முயற்சிகள் நம்பிக்கை பெற்றுவரும் சூழ்நிலையில்

(10 ஆம் பக்கம் பார்க்க)



### அரச படுகொலைகளுக்கு தண்டனையாக 2000 ஆண்டுகள் தீர்ப்பு வழங்கவேண்டி வரும்

### போர்க்காலக் கதை இப்போது வேண்டாம் என்கிறார் பாலா

(நொகன் பத்தமிலிருந்து நமது நிருபர் விதுர்ஷன்)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இரு தரப்புமாகப் போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் நடந்தவற்றை - நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு கொண்டு வருவது முறையானதல்ல. அவை தவிர்க்கப்படவேண்டும் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

தலைவர் பிரபாகரன் மீதான நீதிமன்றத் தீர்ப்பு பற்றி கருத்துக் கூறுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கும் போது -

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசின் நிலைப்பாடல்ல

### புலிகள் தரப்பிடம் ஜி.எல்.பீரிஸ்


விடுதலைப் புலிகள் தலைவர் வே.பிரபாகரன் மீதான கொழும்பு மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பினை அரசாங்கத்தின் நிலையுடன் ஒப்பிடக்கூடாது என அரசதரப்புக் குழுவின் தலைவரான அமைச்சர் ஜிஎல்பீரிஸ் குறிப்பிட்டார்.

நேற்றைய பேச்சுக்களில் பிரபாகரனுக்கு எதிரான நீதிமன்றத்தீர்ப்பு குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் கடும் ஆட்சேபமும் அதிர்ச்சியும் தெரிவிக்கப்பட்டபோதே அமைச்சர் பீரிஸ் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நீதிமன்றங்கள் தன்னிச்சையான அமைப்புகள். அவற்றில் அரசு தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



58 இல இருந்து இப்பவரைக்கும் யார விசாரிக்கிறதாம்...?

## கிழக்கு நிலவரங்கள் குறித்து கருணா — ஹக்கீம் ஆராய்வு

கிழக்கில் காணப்படும் நிலவரங்கள் தொடர்பாக நேற்று அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கேணல் கருணாவும் பேச்சுவார்த்தைகளின் போது ஆராய்ந்தனர். கிழக்கில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையிலான புரிந்துணர்வு, சுமுகமான விவசாய, வர்த்தக மற்றும் மீன்பிடி தொழில் குறித்தும் ஆராயப்பட்டது.

கடந்த ஏப்ரல் 13ம் திகதி வன்னியில் தலைவர் பிரபாகரனுக்கும் அமைச்சர் ஹக்கீமிற்கும் இடையிலான ஒப்பந்தத்தை முழுமையாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுச் செயலணி குறித்தே இன்று முக்கிய பேச்சுக்கள்

இன்று நடைபெறும் மூன்றாம் நாள் பேச்சுக்களில் கூட்டுச் செயலணிக்குழு பற்றியே ஆராயப்படவுள்ளது. கூட்டுச் செயலணியின் நடவடிக்கைகள், செயற்பாடுகள், இதில அங்கம் வகிப்பவர் குறித்து இன்றைய பேச்சுக்களில் ஆராயப்படும். இன்று காலை 9 மணிக்கு 3 ஆம் சுற்றுப் பேச்சுக்கள் ஆரம்பமாகும்.

இதே சமயம் - நேற்றைய பேச்சுக்களில் கூட்டுச் செயலணியில் அங்கம் வகிப்பவர்களின் தொகை குறித்து ஆராயப்பட்டதாக அரச தரப்புத் தகவல் தெரிவித்தது.

இதன் படி இக்குழுவில் அரச தரப்பில் நால்வரும் புலிகள் தரப்பில் நால்வரும் இவர்களுடன் கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் என 10 பேர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

உள்ளே - இன்றைய சிறப்பிதழ் சிறுவர் அரங்கம், குறைதீர் மன்றம், பணய நாடகம்

## சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

மழை காலத்துக்கேற்ப **RAIN** கோட்ஸ், நுளம்பு வலை, தொப்பி, குடை மற்றும் பயணத்துக்கான, பாடசாலைக்கான **Bags** மலிவு விலையில்.

வேலும் மயிலும்
**Fancy goods**
இல 54, நவீன சந்தை,யாழ். (சி-128)

**விற்பனைக்கு**

**National Rice-Cooker, National Gas - Cookers, Blenders, Iron Box,** றேடியோ வகைகள் , மணிக்கூட்டு வகைகள், பற்றிகள் மற்றும் அழகு சாதனப் பொருட்களுக்கு நாட வேண்டிய இடம்.

லக்கி என்ரபிறைஸ்
160, நவீன சந்தை உட்புறம்,
யாழ்.
**T.P-2222858** (சி-129)


## பழுதடைந்த நிலையில் இராணுவத்தினரால் ஒப்படைக்கப்பட்ட உழவு இயந்திரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்திற்குச் சொந்தமான உழவு இயந்திரம் அண்மையில் இராணுவத்தால் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இவ்வியந்திரத்தினை இயக்க முடியாத நிலையில் உள்ளதாக பெரும்பாக உத்தியோகத்தர் சொ.சத்தியேந்திரன் தெரிவித்தார்.

காலபோக நெற்செய்கை நடைபெறும் இவ்வேளையில் அவ்வியந்திரத்தைக் கொண்டு உழ முடியாத நிலை காணப்படுகின்றது. சில உதிரிப்பாகங்கள் அவ்வியந்திரத்தில் காணப்படவில்லை. மோசமாகப் பழுதடைந்த இவ்வியந்திரத்தை படைத்தரப்பினர் பிறிதொரு வாகனத்தில் கட்டி இழுத்து வந்து ஒப்படைத்தனர்.

கமநல சேவைக் குழுவினர் இவ்வாகனம் தொடர்பாக நட்டஈடு கோரவும், திருத்தவும் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர் எனப் பெரும்பாக உத்தியோகத்தர் தெரிவித்தார். (25)

## சாள்ஸ் அன்ரனி மாவீரர் நினைவு கூரல்

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களான சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி லெப்.கேணல் ராகவன், லெப். கேணல் நியூட்டன் ஆகியோர்களினதும் இப் படையணியில் ஓயாத அலை - 3 இன் போது மாவீரர்களான ஏனைய போராளிகளினதும் நினைவு கூரல் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது.

## விளையாட்டு

### மகரகம தடகளப் போட்டி
## யாழ்.கலாசாலைகள் அணி முதலாம் இடத்தைப் பெற்றது

(யாழ்ப்பாணம்)

மகரகமவில் நடைபெற்ற, அனைத்து ஆசரியர் கலாசாலை ஆசிரிய மாணவர்களிடையிலான தடகள விளையாட்டுப்போட்டிகளில் யாழ்ப்பாண அணி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

யாழ். அணியில் பலாலி, கோப்பாய், ஆசிரிய கலாசாலை அணிகள் இடம் பெற்றிருந்தன. இவ்வணிகள் இணைந்து யாழ். அணிக்காக 117 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தை பெற்றுள்ளன.

## பொன் அணி உதைபந்தாட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவு

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரிக்கும **(St.Patricks)** வட்டுக்கோட்டை யாழப்பாணக் கல்லூரிக்கும் இடையே ஆண்டுதோறும் இடம்பெறுகின்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டி நேற்று மாலை 4.30 மணியளவில் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி எதுவித கோல்களும் அடிக்காத நிலையில் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது.

இதேவேளை- யாழ்.மத்திய கல்லூரிக்கும், யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரிக்கும் இடையே ஆண்டு தோறும இடம்பெறும் சிநேகபூர்வ உதைபந்தாட்டத்தில், சென்.ஜோன்ஸ் கல்லூரி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியுள்ளது. இப் போட்டி யாழ். சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம் பெற்றது.

## கூடைப்பந்தாட்டம் மத்திய கல்லூரி வெற்றி

விபுலானந்தன் ஞாபகார்த்த பாடசாலைகளுக்கிடையிலான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி, பரியோவான் கல்லூரி அணியை இறுதியாட்டத்தில் 53:41 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிக்கு வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.

## 75 பாடசாலைகள் புனரமைப்பு ஜி.ரி.இசற். நிறுவனம் உதவும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இராணுவ நடவடிக்கை காரணமாக சேதமடைந்த சுமார் எழுபத்தைந்து பாடசாலைகளைப் புனரமைப்பதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் முன்வந்துள்ளது.

சுமார் எண்ணூறு அமெரிக்க டொலர்கள் செலவில் மேற்படி பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. ஐரோப்பிய யூனியன் மேற்படி புனரமைப்புப் பணிகளுக்கான நிதியை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஊடாக வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி உதவித்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் சுமார் நாற்பது முதல் ஐம்பது வரையிலான பாடசாலைகள் புனரமைப்பு செய்யப்படவிருக்கிறது. உடனடியாக இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. ஆறுமாதங்களில் இத திட்டம் பூரணமாக்கப்படவுள்ளது.(க,லி)

## மந்துவில் பொதுப் பட்டியில் குழுமாடுகள் அடைக்கப்படும்

மந்துவில் விவசாய சம்மேளனத்தினால் கட்டாக்காலிகளாகத்திரிந்த 21 குழு மாடுகள் பிடிக்கப்பட்டுள்ளன. குறியுள்ள சில மாடுகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மிகுதி மாடுகளை மந்துவில் மேற்கு விவசாய சம்மேளனம் கமநல சேவை நிலையப் பொதுப்பட்டியில் அடைக்கப் படவுள்ளதாகவும் தெரிவித்தனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட மாடுகள் அனைத்தும் நாம்பன் குழு மாடுகளாகவே உள்ளன. இம்மாடுகள் பொருண்மிய மேம்பாட்டுக் கழக உதவியுடன் பொதுப்பட்டியில் அடைக்கப் படவுள்ளன. (25)

## ரி.ரி.என் பொது அறிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

ரி.ரி.என் தொலைக்காட்சி நிறுவனம் நடத்தவுள்ள புதிர்ப் போட்டியில் முதல் சுற்றில் பங்கு பெறத் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல் நேற்று முன்தினம் நமது ஈழநாட்டில் வெளியாகியிருந்தது. அதன் தொடர்ச்சி இன்று வெளியாகின்றது.

**வேம்படி மகளிர் கல்லூரி**

ஜைரீனா தங்கவேல், விஜிதா சக்திவேல், காயத்திரி செல்வரத்தினம், பத்மலோஜினி பரமேஸ்வரன், லாவண்யா சண்முகதாஸ், ஊர்மிளா புவனேந்திரன், சன்மினி சிவபாத சுந்தர மூர்த்தி, கொவஸ்ரிக்கா ஆஷா அழகராசா, பாலநந்தினி சரவணபவானந்தன், நர்மதா நாகேந்திரராசா, இரா மவித்தியா இராமச்சந்திரன், அனோஜ் நிஷாந்தி ஜெயச்சந்திரன் , திவ்வியா இராசதுரை, ஸீசா பிரியதர்சினி பிரான்சிஸ், தினோ ஜாசீவரட்ணம், ரிசானி தர்மலிங்கம், இராமச்சந்திரன் மாதங்கி.

**யா/ சென்ஜோன்ஸ் கல்லூரி**

நல்லைவரோதன் கஜானந், சிறீஸ்கந்தராசா துஸ்யந்தன், கோபாலசிங்கம் நிருத்திகன், விமலதாஸ் உரேஷ், லோகேஸ்வரன் மயூரன், முருகையா துஷ்யந்தன், இரவீந்திர குமாரன் நிசாந்தன், தில்லைநாயகம் துஷ்யந்தன், பாஸ்கரன் சாந்தகுமார், சிவகுமாரன் சியாந், கனகேஸ்வரன் ராஜிவ், கந்தஞானி தர்சன், பிறேமச்சந்திரன் ஜதுர்சன், விநாயக மூர்த்தி சுஜீவன், பஞ்சலிங்கம் பிரதீபன், தர்மகுலசிங்கம் மயூரன்,யோகராசா கிஷானந்த், சண்முகாநந்தன் நவதர்சன், சிவபாதம் பிரியதர்சன், குகதாசன் ஜினேஸ்குமார், மனோரஞ்சன் கிறிஸ்ரி நிரோஜன், குணபாலசிங்கம் கோபிலன், தங்கராசா தலெளஷகன், விமலதர்ம ஐயா ஞானரூபன், விஜயகாந்தன் அரவிந்தன், மகேஸ்வரன் பிரதிஷ், கிருபானந்தன் கோபாலரட்ன

**யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்**

டர்லின் நீருஷா சத்தியநேசன், செபோஜினி செபஸ்ரியாம்பிள்ளை, டெல்சியா கிளபோடாசியஸ், மரிற்றா றொசானி பேணார்ட், அனிற்றா லக்ஷ்கா யோன்வின்சன், லுமெண்டா அன்ரன் குலசேகரம், மரியநாயகம் மேரி சுவீற்சினி, முத்துக்குமாரசுவாமி லோஜினி, பிறேமாஜினி சிவபாலன், சிந்துஜா ஆனந்தராசா.

**யா/ இந்துக்கல்லூரி**

ஜெகதீஸ்வரன் பிறேம்குமார், கோபாலகிருஷ்ணன் நிசாந்தன், கனகநாயகம் சயந்தன், மகாதேவா கலாரூபன், சிவலிங்கம் சனாதனன், சிவா திலக் சுந்தரலிங்கம் கோகுல்ராஜ், பரரா ஜசிங்கம் சந்திரகுமார்,

**யா/கொக்குவில் இராமகிருக்ஷ்ண மகாவித்தியாலயம்**

ஜெயபாலகிருஷ்ணன் துஷா.

**யா/மத்திய கல்லூரி**

சிவநேசன் மயூரன், துரைசிங்கம் நோவா, செல்வம் அசோக், தேவதாசன் அஜந்தன், இரவீந்திர சர்மா கிரிதரன், சிவசுப்பிர மணியம் சுரேஸ்குமார், மகாதேவா மகிந்த ராஜ், நவரட்ணம் பிரதீபன், நாகராசா திவாகர், துரைசிங்கம் யதுகுலன், தம்புத்துரை சற்குணராசா, சாம்பவசிவம் தயாகரன்.

**யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்**

சின்னத்துரை சிவாகரன், ராதிகா குமாரசாமி.

**யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி**

இராசரத்தினம் தர்மேந்திரா

**யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம்**

ஆறுமுகமுதலியார் மிருளாயினி,

**யா/வைத்தீஸ்வராக் கல்லூரி**

தயாபரன் நிறஞ்சன், ஜெயராமன் ஞானசௌந்தரி, செல்வநாயகம் சகிலன், செல்வேந்திரன் செல்வரூபன், பிரதிபா ஏரம்பமூர்த்தி.

**யா/இந்து மகளிர் கல்லூரி**

ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன், ராதிகா முருகையா, பாக்கியநாதன் கீர்த்தனா, தங்கராசா அனோஜா.

**யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்**

லிங்கரட்ணம் நிரஞ்சனா.

**யா/கொக்குவில் இந்துக்கல்லூரி**

தர்மலிங்கம் கார்த்திகா, பத்மகுமார் விஜயதீபன், தஷாயினி அம்பலவாணன், தம்பிராசா சுகாஜினி, தனுஷா பரமேஸ்வரன், சிவநாதன் திருக்குமாரன், சிவறூபா சின்னக்கோன், தம்பிரத்தினம் மயூரன், கௌசல்யா விநாயகமூர்த்தி, இராசேந்திரம் பார்தீபன், ஜெயராசா வனிதா, தம்பாப்பிள்ளை அம்பாலிகா. அரசரட்ணம் அமிர்தவர்சினி, செல்லத்துரை காயத்திரி,

## பருவகாலச் சீட்டு விநியோகம்

(ஊரெழு)

யாழ்ப்பாணம், கோண்டாவில் பஸ் டிப்போ தற்போது போக்குவரத்து பருவகால மாதாந்த சீட்டுக்களை விநியோகம் செய்து வருகின்றது. கடந்த மாதம் 26ம் திகதி ஆரம்பமான வழங்கல் பணி எதிர்வரும் 5ம் திகதி வரை இடம்பெறும். பாடசாலை மாணவர்களுக்கு கோண்டாவில் டிப்போவில் வைத்தும் தனியார்களுக்கு யாழ். பேருந்து நிலைய விநியோகக் கூடத்திலும் வைத்து சீட்டுக்கள் வழங்கப்படுகின்றன.

## கைதடி நவீல்ட் பாடசாலைக்கு தனிநபரிடம் நிதி வழங்க வேண்டாம்

### அதிபர் வேண்டுகோள்

(கைதடி)

எந்தவொரு தனி நபருக்கும் கைதடி நவீல்ட் -செவிப்புலன், விழிப்புலன் இழந்தோர் பாடசாலையின் கட்டடப் புனரமைப்புக்கோ அன்றி வேறு தேவைகளுக்கோ நிதி சேகரிக்க அனுமதி அளிக்கப்படவில்லை என மேற்படி பாடசாலையின் அதிபர் த.சாம்சன் அறிவித்துள்ளார்.

இவ்வருடத்தில் கைதடி நவீல்ட் பாடசாலையின் பெயரைக் கூறி யாராவது நிதி சேகரிப்பில் ஈடுபட்டிருந்தால் அது பற்றிய விபரத்தைத் தமக்கு தெரியப்படுத்தும்படியும் எந்தவொரு தனி நபரிடமும் நவீல்ட் பாடசாலைக்கான நிதியுதவியை வழங்க வேண்டாம் எனவும் அதிபர் கேட்டுள்ளார்.

## ஒன்றிய அலுவலகம் திறக்கப்பட்டிருக்கும்

பொன்மாலைப் பொழுது நிகழ்விற்கான விற்பனை செய்யப்பட்ட ரிக்கற்றுக்களின் அடிக்கட்டைகளை மாணவர்கள் மீள ஒப்படைக்க வசதியாக இன்றும் நாளையும் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய அலுவலகம் திறக்கப்பட்டிருக்கும்.


## கேள்வி அறிவித்தல்

### பருத்தித்துறை நகராட்சி மன்றம்

கீழ் குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விப்படிவங்கள் நிர்மாணப்பயிற்சி நிறுவனத்தின் (இக்ராட்) (கட்டிடம் நிர்மாணிப்பதற்கு) பதிவு செய்த ஒப்பந்தகாரர்கள்/ இந்நகர சபையில் ஏற்கனவே ஒப்பந்தம் கைச்சாத்திட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கீழ் அட்டவணையிற் காட்டப்பட்டுள்ள உரிய கேள்வி வைப்புப்பணம், கேள்விப்பத்திரப்பணம், பெ.சே.வரி செலுத்துவதன் பேரில் 2002ம் ஆண்டு கார்த்திகை மாதம் 08ம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை வழங்கப்படும்.

பூர்த்தி செய்த கேள்விப்பத்திரங்கள் 2002ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு பதிவு அஞ்சல் மூலமோ அல்லது கேள்விப் பெட்டியிலிடுவதன் மூலமோ ஒப்படைத்தல் வேண்டும். கேள்விக்கான கடிதஉறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 2002ம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ந் திகதி முற்பகல் 10.30 மணிக்கு கேள்விச்சபையால் பரிசீலனை செய்யப்படும். அச்சமயம் கேள்வி சமர்ப்பித்தவர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் சமூகமளிக்கலாம்.

காரணம் எவையும் காட்டப்படாத எக் கேள்வியையும் ஏற்க அல்லது நிராகரிக்க கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

| வேலைவிபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | பெறுமதி சேர்வரி 20% | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் |
|---|---|---|---|
| 01. ஆத்தியடிப்பிள்ளையார் கோயில் முன்வீதி | 250/- | 50/- | 1500/- |
| 02. தோட்டக்கலட்டி வீதி | 250/- | 50/- | 1500/- |

மேலதிக விபரங்களை பருத்தித்துறை நகராட்சி மன்ற அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**ந.சிவபாலதருமகுலசிங்கம்,**
**செயலாளர்,**
**நகராட்சி மன்றம், பருத்தித்துறை.**

**நகராட்சி மன்ற அலுவலகம்,**
**பருத்தித்துறை.**
**2002.10.25**

(சி-121)

**அ.வின்சன் கெனடி ஜே.பீ.யு.எம்,**
**தலைவர்,**
**நகராட்சி மன்றம், பருத்தித்துறை.**

# மக்களின் உடனடித் தேவைகளுக்கு பேச்சுக்களில் முன்னுரிமை வேண்டும்!

## மன்னார் ஆயர் ரணில் - பிரபாவிடம் கோரிக்கை



(மன்னார்)

"பொது மக்களின் இயல்பு வாழ்க்கையை மேம்படுத்தக்கூடிய விடயங்களுக்கு தாய்லாந்துப் பேச்சுக்களின் போது முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இவ்வாறான விடயங்களில் அரசும் விடுதலைப் புலிகளும் சுமுகமான தீர்மானத்துக்கு வரவேண்டும்" இவ்வாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசெப வேண்டுகோள் விடுத்துள்ளார். பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவிடமும், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனிடமும் இவவிடயம் குறித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் மன்னார் ஆயரின் மேற்படி வேண்டுகோள் அடங்கிய கடிதம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

தற்போது தாய்லாந்தில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்களினால் மக்களுக்கு உடனடியான பலன கிடைப்பதற்கு வழிவகை செய்துகொள்ளப்பட வேண்டும். எனவே, சமாதானப் பேச்சுக்களின் போது பொதுமக்களின் அத்தியாவசியத் தேவைகள் பூரணமாக நிறைவு செய்யப்படக் கூடிய வகையிலான தீர்மானங்கள் மிக அவசரமாக எடுக்கப்படவேண்டும். உணவு விநியோகம், வீட்டுவசதி, போக்குவரத்து, மீள் குடியமர்வு போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு, பொதுமக்கள் நேரடியாகப் பயன் பெறும் வகையில், சமாதானப் பேச்சுவார்த்தை அமையவேண்டும். நாட்டின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு ஏற்படுவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதாலேயே, மக்களின் உடனடித் தேவையான முழுமையான இயப்பு நிலையைத் தோற்றுவிக்கும் வகையிலான தீர்மானங்களுக்கு இரு தரப்பும் வரவேண்டும் என்றும் மன்னார் ஆயர் தமது வேண்டுகோள் கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார். (க,ல!)

## பாடசாலைகளில் நூலகவாரம்

(மீசாலை)

உலகப் பாடசாலை நூலக வாரமாக - ஒக்ரோபர் 28 முதல் நவம்பர் 4 வரை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாரம் மாவட்ட ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளில் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவ்வாரத்தில் - ஒவ்வொரு பாடசாலையிலும் வாசிப்பு வாரம் மேற்கொள்ளல், அருகில் உள்ள நூலகத்தில் நடைமுறைகளைப் பார்த்தறிதல், பாடசாலை நூலகத்திற்கு மேலதிக நூல்களைப் பெறுவதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்ளல் போன்றவற்றில், சகல பாடசாலை மாணவர்களையும் ஈடுபடுத்தி, நூலக வாரத்தைக் கொண்டாடுமாறு சகல பாடசாலை அதிபர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (25)

## நெடுந்தீவில் மின் விநியோகம்

நெடுந்தீவுப்பகுதியில் பிரதான வீதியில் அமைந்துள்ள வீடுகளிற்கு 29ம் திகதி முதல் மீண்டும் மின் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மின்சார சபையினால் மின் விநியோகம் பொறுப்பேற்கப்பட்டதை அடுத்தே மேற்படி பகுதிக்கு மின் வழங்கப்படுகின்றது. (112)

## ஸ்கந்தாவில் பரிசளிப்பு விழா

(சுன்னாகம்)

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஒறேற்றர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி சி.மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். ஆசியுரையை சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், நிறுவுநர் நினைவுப் பேருரையை கலாநிதி பொ.நவரட்ணமும் வழங்கவுள்ளார்கள்.

திருமதி ராஜசிவசக்தி மகேசன் பரிசில்களை வழங்கவுள்ளார்.

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை விலக்கக்கோரி கையெழுத்துவேட்டை

(மட்டக்களப்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை வாபஸ் பெறுவதுடன், அரசியற் கைதிகள், தண்டனை பெற்றவர்களை பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்யுமாறு கோரி மனித உரிமை அபிவிருத்திக்கான நிலையம் மட்டக்களப்பில் கையெழுத்து வேட்டையை ஆரம்பித்துள்ளது.

ஐயாயிரம் கையெழுத்துக்களைத் திரட்டி பிரதமர், ஜனாதி பதி ஆகியோருக்கும் அனுப்பி வைக்க இருப்பதாக இந்நிலையத்தினர் தெரிவித்துள்ளனர்.

## தனி அதிகார அலகு இல்லாத தீர்வு முஸ்லிம் மக்கள் ஏற்க மாட்டார்கள்!

### அம்பாறை நாடாளுமன்ற உறுப்பினர் ஹாரிஸ்

புலிகளுக்குத் தமிழீழம் தாயகமாக இருப்பது போல, முஸ்லிம்களுக்கு கரையோர மாவட்டம் தனி அதிகார அலகுத் தாயகமாக மலர வேண்டும். இதனைப் புலிகளும் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகின்றேன். தனி அதிகார அலகு இல்லாத எந்தவொரு தீர்வையும் நாம் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. இவ்வாறு திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் H.M.M.ஹாரிஸ் கல்முனையில் நேற்றுமுன்தினம் நடந்த கலந்துரையாடலின்போது தெரிவித்துள்ளார்.

நாம் தனி அலகுக் கோரிக்கையைக் கைவிடவோ முஸ்லிம்களை எவருக்கும் தாரைவார்த்துக் கொடுக்கவோ தயாரில்லை. கடந்த காலத் தேர்தல்களில் தனி அதிகார அலகுக்காகத்தான் முஸ்லிம் மக்கள் முஸ்லிம் காங்கிரஸுக்கு அதிகாரம் அளித்தனர்.

தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தை உச்சத் தியாகங்களோடும் உயர் இராணுவப் பலத்தோடும் முன்னெடுக்கும் புலிகள் இயக்கமே இப்பேச்சுவார்த்தையில் பிரிக்க முடியாத சக்தியென்பது உலகறிந்த விடயம்.

புலிகளின் பங்களிப்பில்லாத, அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படாத எந்தத் தீர்வும் வட.-கிழக்கில் இன்னொரு இரத்த ஆற்றையே ஓட வைக்கும் என்பது நிச்சயமாக உள்ளது.

அதேபோல் வட-கிழக்கு முஸ்லிம்களை திருப்திப்படுத்தாத அரசியல் தீர்வுகளும் இதே நிகழ்வையே எதிர்காலத்தில் தோற்றுவிக்கும் என்பதால் இதற்கு எமது கோரிக்கைகளை சகல தரப்பும் ஏற்றுக்கொள்ள வேண்டும் - இல்லையேல் சகல மக்களும் ஒற்றுமையாக வாழமுடியாத நிலை ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

## தனியார் சிற்றூர்திச் சங்கம் அங்குரார்ப்பணம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. சுமார் 12 வருடகால இடைவெளிக்குப் பின்னர் இச்சங்கம் இயங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (51)

## மருத்துவ வாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவபீட மாணவர்களால் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வரும் மருத்துவ வாரம் நேற்று முதலாம் திகதி தொடக்கம் மூன்று வாரங்கள் நடைபெறவுள்ளது. இறுதி நாளன்று விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (108)

## கோதுமை மாவின் விலையை பிரிமா நிறுவனம் உயர்த்தியது

(கொழும்பு)

கோதுமை மாவின் விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 1 ரூபா 50 சதத்தினால் உயர்த்தப்பட்டிருப்பதாக பிறிமா நிறுவனம் அறிவித்துள்ளது. உலகச் சந்தையில் கோதுமைக்கான விலை உயர்ந்துள்ளதையடுத்தே இவ்விலையேற்றத்தைச் செய்ய வேண்டியுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

கோதுமை உற்பத்தியில் அதிகமாக ஈடுபடும் அமெரிக்கா, கனடா, அவுஸ்ரேலியா ஆகிய நாடுகளில் தற்போது பருவமழைக் காலமாதலால் உற்பத்தி குறைவடைந்துள்ளதாகவும் இதனால் உலகச் சந்தையில் கோதுமையின் விலை உயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வீதி ஒழுங்கு முறைகள் குறித்து பாடசாலைகளில் கருத்தரங்கு

வீதிகளில் ஏற்படும் விபத்துக்கள், அதனைத் தவிர்க்கும் முறைகள் தொடர்பாக - பாடசாலைகள் தோறும் வீதி ஒழுங்கு விதிகள் குறித்த கருத்தரங்குகள் நடைபெற்று வருகின்றன.

இதற்கென பாடசாலைகள் தோறும் 4 உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு போக்குவரத்து விதிகள் குறித்து விளக்கமளித்து - பாடசாலையின் முன் கடமையில் ஈடுபடுத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சில முக்கிய பாடசாலைகளில் இத்திட்டம் ஏற்கனவே நடைமுறைககு வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. குடாநாட்டில் வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில், பாடசாலை மாணவர்களைப் பாதுகாப்பதற்கும், போக்குவரத்து விதிகள் தொடர்பான அறிவினைப் பெற்றுக் கொள்வதற்குமே இத்தகைய கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## அமெரிக்க உதவியுடனான கண்ணிவெடி அகற்றும் குழுவின் பணிகள் பூர்த்தி!

(கொழும்பு)

அமெரிக்காவின் அனுசரணையில் செயற்படும் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் கடந்த வாரம் தமது பணிகளைப் பூர்த்தி செய்துள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம், கண்ணிவெடி அகற்றும் வேலையை ஆரம்பித்த இந்தக் குழுவினர், யாழ்ப்பாணம் சரசாலைப் பகுதியில் 2 லட்சத்து 23 ஆயிரம் சதுரஅடி விஸ்தீரனமான நிலப்பரப்பை பாதுகாப்பானதாக மாற்றியிருக்கிறார்கள்.

அவர்கள் 980 மிதிவெடிகளையும் வெடிக்கத் தயாராக இருந்த 42 வெடிபொருட்களையும் மீட்டுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளது.

## தீபாவளிச் சந்தை நகரில் சூடு பிடிக்கிறது

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு யாழ். நகரக் கடைத் தெருப் பகுதிகள் களைகட்ட ஆரம்பித்துள்ளன.

நவீன சந்தைப்பகுதி மற்றும் பெரியகடை உட்பட நகரின் ஏனைய பகுதிகளிலும் புடைவை வியாபாரம் சூடுபிடித்துள்ளது. புடைவைக் கொள்வனவுக்காக நகருக்கு வந்து செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கை வழமைக்கு மாறாக அதிகரித்துள்ளது.

அத்துடன், வீதியோர வியாபாரமும் சுறுசுறுப்பாகவும், அதேவேளை - ஒழுங்கமைப்புமின்றியும் நடைபெறுகிறது. இதனால் வீதிப் போக்குவரத்துக்கள் ஆங்காங்கே அடிக்கடி தடைப்படும் சம்பவங்களும் நடைபெறுகின்றன. பொலிஸார் வீதிப் போக்குவரத்தை சீர் செய்ய சிரமப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. (க)

## விமானக் கொள்வனவுகளில் 1500 கோடி ரூபா மோசடி

### விசாரணைக்குழு கண்டறிந்தது

(கொழும்பு)

இலங்கை வான்படைக்கு விமானம் கொள்வனவு செய்வதில் பாரிய மோசடி இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எம்.ஐ. தாக்குதல் ஹெலிகப்டர்கள், சி130 போக்குவரத்து விமானங்கள் ஆகியவை கொள்வனவு செய்யப்பட்டபோதே இம்மோசடி இடம்பெற்றிருக்கின்றது.

1997ஆம், 1998 ஆம் ஆண்டுகளின்போதே சுமார் 1500 கோடி ரூபா மோசடி இடம்பெற்றிருப்பதாக ஆயுதக் கொள்வனவு சம்பந்தமாக விசாரணை நடத்தும் குழு தெரிவித்துள்ளது.

## கிழக்கு விவசாய பீடத்திற்கு விவசாயபாட ஆசிரியர்களும் அனுமதி

(திருகோணமலை நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழகம் - விவசாய பட்டப்படிப்புக்கு விவசாயத் திணைக்கள அதிகாரிகளுக்கும், விவசாயத்துறை பாட ஆசிரியர்களுக்கும் உள்வாரியாக கற்கை நெறியை தொடர இம்முறையும் வாய்ப்பு வழங்கியுள்ளது.

40 வயதுக்கு உட்பட்ட பயிற்றப்பட்ட விவசாய ஆசிரியர்கள், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் 10 பேருக்கு உள்வாரியாக அனுமதி கிடைக்கத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

இம்முறை 6 அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் உட்படப் பலர் விண்ணப்பம் செய்து இந்த அனுமதிப் பரீட்சையிலும் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சலுகையின் அடிப்படையில் - பல்கலைக்கழகம் செல்லும் அரச ஊழியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய அனுமதி கிடைக்கும். குறைநத புள்ளிகள் வித்தியாசத்தில் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இழந்தவர்களுக்கும் இத்திட்டம் மிகவும் பயனுடையதாக இருக்கும் என பல்கலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## கும்பாபிஷேக மலர்

(அல்வாய்)

அல்வாய் சாமணந்தறை ஆலடிப பிள்ளையார் கோவிலின் மகா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## லயன்ஸ் கழகங்களூடாக தென்னங்கன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள 14 லயன்ஸ் கழகங்களுக்கூடாகவும் இலவசமாக விநியோகிப்பதற்கு 2,800 தென்னங்கன்றுகளை தெங்கு பயிர்ச்செய்கைச் சபையின் தலைவரான லயன் லிங்கன் பெர்ணான்டோ அன்பளிப்புச் செய்துள்ளார்.

லயன்ஸ் கழகத்தின் முன்னாள் மாவட்டத் தலைவரான இவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே - லயன்ஸ் கழகங்கள் ஒவ்வொன்றினூடாகவும் 200 தென்னங்கன்றுகளை இலவசமாக விநியோகிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துள்ளார். மூன்றரை ஆண்டுகளில் காய்க்கக்கூடிய இத்தென்னங்கன்றுகள் விரைவில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் என நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் வி.எஸ்.சொக்கலிங்கம் தெரிவித்தார்.

# புட்டினைத் தோற்கடிக்கும் அமெரிக்காவின் புதிய முயற்சி; ரஷ்ய இராணுவத்தின் அதிரடி நடவடிக்கையால் முறியடிப்பு!

## செச்னியப் போராளிகளின் பணய நாடகம் பற்றிய - ஒரு பார்வை.

விளாடிமிர் புட்டினின் ஆட்சிக் காலத்தில் ரஷ்ய மக்கள் இரண்டாவது பெரும் துன்பியல் நாடகத்தை


புட்டின்

அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். முதலாவது சம்பவம் - கர்ஸ்க்கின் நீர்மூழ்கிக்கப்பல் இனந்தெரியாத ஏவுகணைத் தாக்குதாலில் அழிக்கப்பட்டபோது, இதே மாதிரி நெருக்கடியை மொஸ்கோ அனுபவித்தது. அந்நீர்மூழ்கிக்கப்பல் தாக்கப்பட்டதற்கு யார் பொறுப்பு என்பது பற்றி வெளிப்படையாக இதுவரை தகவலில்லாதுவிட்டாலும், மறைமுகமாக சர்வதேச தரத்தில் சக்தி வாய்ந்த இரு அரசுகள் சம்பந்தப்பட்டதாக, ரஷ்ய இராணுவ நிபுணர்களாலும் மேற்கு நாடுகளின் இராணுவ வல்லுநர்களாலும் ஊகிக்கப்பட்டது.

அதில் காணப்பட்ட தொழில்நுட்பத்தையும், ஆயுத பலத்தையும் பெறுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சி சாத்தியப்படாதபோது, தாக்கி அழிக்கப்பட்டதாகத் தகவல் வெளியாகியது. தாக்கப்பட்ட பின்னர் கூட அதனை எதிரியின் கண்களுக்கோ, கைகளுக்கோ தென்படாதபடி ரஷ்ய இராணுவம் பாதுகாப்பதில் வெற்றி கண்டது. இது அந்நீர்மூழ்கியின் தொழில்நுட்ப வலுவை வெளிக்காட்ட போதுமானதாக உள்ளது. வாசகர்களே! இவ்வாறம் மொஸ்கோவில் நிகழ்ந்த பணயக்கைதிகள் விவகாரத்தின் சாதக பாதக தன்மைகளையும், அதன் விளைவுகளையும் பரிசீலிப்போம்.

செச்னியப் போராளிகள் தனிநாட்டை அமைப்பதற்காகப் போராடுகின்ற போராட்ட அமைப்பு என்ற வகையில் -அவர்களின் தனிநாட்டுக் கோரிக்கையும், ரஷ்யாவில் இருந்து பிரிந்து செல்லும் உரிமையும் நியாயமானதாகவே தென்படுகிறது. அதற்காக சமகால உலக அரசியல் போக்கையோ அல்லது அரசியல் அதிகாரகத் தன்மைக்கான வடிவத்தையோ புரிந்துகொள்ளாமல் அந்நிய சக்திகளுக்காக விலைபோவதையே ஏற்றுக கொள்ள முடியாதுள்ளது.

கூலிக்காக தமது மக்களையும், நீண்டகாலமாக நிலைத்து நிற்கப்போகும நட்புகளையும் காட்டிக்கொடுப்பதே கேவலமான போராட்டமாக செச்னிய போராட்டத்தை மதிப்பீடு செய்ய வைத்துவிடும்.

ரஷ்யர்கள் எப்போதும் செச்னியர்களின் அயலவர்கள். அரை நூற்றாண்டுகள் வரை நட்புக்கலந்த அரசியல், இராணுவ, பொருளாதார ஒன்றிணைப்புக்குள் வாழ்ந்தவர்கள்.

அவர்கள் கூட்டமாக வாழமுடியாத சூழலைத் தவிர்ப்பதற்காக அந்நியர்களிடம் சரணடைவது ஆரோக்கியமான அரசியல் போராட்டமாக அமையாது.

ரஷ்ய ஆட்சியாளர்கள் - செச்னிய மக்களையும் அவர்களின் போராட்டத்தையும் மூர்க்கத்தனமாக அடக்குவதென்பதும் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகும். செச்னியர்களின் போராட்டத்தை ரஷ்ய ஆட்சியாளர்கள் பயங்கரவாதத்திற்கு ஒப்பானதாகக் கொள்கின்றனர். செச்னியர்களும் பயங்கரவாதத்திற்கு ஒப்பான செயல்களில் அண்மைக்காலத்தில் நடந்துள்ளார்கள் என்பதே யதார்த்தமாகும். சமகால அரசியல் - பொருளாதாரப் போக்கை சரிவர உணராததன் விளைவால் ஏற்பட்டதாகவோ அல்லது பிழையான வழிகாட்டலுக்கூடாக ஏற்பட்டதாகவோ அதனைக் கருதவேண்டியுள்ளது. எது எவ்வாறானதாக அமைந்தாலும் செச்னியர்கள் அந்நியசக்திகளின் நலன்களுக்காக போராட்டத்தையும், செச்னிய விடுதலையும் பணயம் வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. அது விடுதலைப் போராட்டமாகவும் அமைந்துவிடாது. இனி விடயத்திற்கு வருவோம்.

செச்னிய போராளிகளின் பணய நாடகம் முறியடிக்கப்பட்டுவிட்டது. விளாடிமிர் புட்டினின் துணிச்சலான முடிவு, நூற்றுக்கு மேற்பட்ட ரஷ்ய மக்களை இழக்க காரணமாக அமைந்தபோதும், வெற்றிகரமாக முறியடிக்கப்பட்ட செய்தி மேற்கு உலகத்திற்கு அதிர்ச்சியான செய்தியேயாகும். செச்னிய விவகாரம் ரஷ்ய மக்களுக்கும் அதிர்ச்சியானதுதான். ஆனால், ஒப்பீட்டடிப்படையில் ரஷ்யர்கள் எப்படியோ, இவ்வளவு அழிவை சந்தித்திருப்பார்கள் என்பது தீவிரவாதிகளின் கோரிக்கையிலிருந்து விளங்கிக்கொள்ளலாம்.

புட்டின் அத்தகைய விஷவாயுவை பிரயோகிக்கும் முடிவை எடுக்காது விட்டிருந்தாலும், பணயக்கைதிகளான ரஷ்யர்கள் பலர் கொல்லப்பட்டிருப்பார்கள். ஆனால் இவ்வாறு துணிச்சலாக புட்டின் எடுத்த முடிவு, ரஷ்யர்களின் உலக அதிகார அரசியலின் அதன் பங்குக்கான புதிய பரிணாமத்தை வெளிப்படுத்தியுள்ளது. மேற்கு, இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று கருதி அரசியல் நகர்வுகளை ஆரம்பத்திருந்தது புட்டினை முறியடிக்க மேற்கு எடுத்த புதிய நாடகம் புட்டினாலேயே தோற்கடிக்கப்பட்டுவிட்டது. இவ்வாறு புட்டின் வேகமாகவும், இரகசியமாகவும் நகர்வுகளை மேற்கொண்டு திடீர்த்திருப்பங்களை ஏற்படுத்துவார் என மேற்குலகம் எதிர்பார்க்கவேயில்லை.

ஈராக் தொடர்பாக ரஷ்யாவின் நிலைப்பாட்டை மாற்றுவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையே பணயக்கைதிகளின் விவகாரம். இதனை சற்று விரிவாக நோக்குவது பொருத்தமானது.

ஏற்கனவே, இதே பத்தியில் புட்டினுக்கும் புஷ்ஷுக்குமான ஈராக் தொடர்பான மோதல் பற்றி குறிப்பிட்டிருந்தேன். அதன் தொடர்ச்சியாகவே இதனையும் கொள்வோமாயின் இலகுவாக விளங்கிக் கொள்ளமுடியும்.

ஈராக் மீது அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இரண்டு அரசுகளும் ஐக்கிய நாடுகள் சபைக்கூடாக போரை முன்னெடுத்துச் செல்லமுடியாத தடையை ரஷ்யா விதித்திருந்தது. ரொனி பிளயர் இருதடவை புட்டினை சந்தித்தும், நிலமையை எடுத்து விளக்கியும், புட்டின் ஈராக் விவகாரத்தில் மேற்குடன் பனிப் போரையே கையாள விரும்பினார். அதனால் ஆத்திரப்பட்ட மேற்கு, எப்படியாவது ஈராக் மீது போர்தொடுக்க வேண்டுமென துடித்துக் கொண்டிருந்த நிலையில், செச்னியப் போராளிகளையும், போராட்டத்தையும் கையாண்டேனும் ரஷ்யாவை வழிக்கு கொண்டுவர எண்ணியது. ரஷ்யாவின் தலைமையை விலைக்கு வாங்க முடியாத மேற்குக்கு செச்னியப் போராளிகள் விலையாக கிடைத்தனர். அவர்களைப் பயன்படுத்தி சாதகமான சூழலை உருவாக்கலாமென நம்பி காரியத்தில் இறங்கினர். குறிப்பாக அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ. இவ்விடயத்தில் கணிசமான செல்வாக்குச் செலுத்தியதாக மேற்குக்கு எதிரான ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

செச்னியப் போராளிகளை தயார்ப்படுத்திய சி.ஐ.ஏ., பணயக்கைதிகள் நாடகத்தை மிக நீண்ட நாட்களுக்கு தொடர்வதென்றே திட்டமிட்டிருந்தது. போராளிகள் வைத்திருந்த ஆயுதங்களும், உணவு மாத்திரைகளும், பெண் போராளிகள் கட்டியிருந்த குண்டுகளும் அதற்கு ஆதாரமாகும். ஏனெனில் ரஷ்யாவின் அரசியல் தலைமையை நெருக்கடிக்குள் தள்ளிவிட்டு, அந்நெருக்கடிக்குள் பேரம்பேசும் அரசியலை முன்னெடுத்துக் கொண்டு, ஈராக் மீதான போரையும் நியாயப்படுத்திக் கொண்டு, போராளிகளுடன் சமரசம் பேசி பிரச்சினையைத் தாம்


புஷ்

தீர்த்ததாகவும் ஏற்படுத்திக் கொள்ளலாமெனத் திட்டமிட்டிருந்தது. ஈராக் விவகாரத்தையும், செச்னிய விவகாரத்தையும் ஒரே வகைப்பாட்டுக்குள் போட்டுக்கொள்வதும் அமெரிக்காவின் எதிர்கால அரசியலுக்கு இலாபமாக அமையும். செச்னியாவுக்குள் நிற்கும் ரஷ்ய இராணுவத்திற்கு பதிலாக, அமெரிக்க இராணுவத்தை குவிக்கவும் அமெரிக்கா தயங்காது. அமெரிக்காவுக்கு செச்னியாவோ, ரஷ்யாவோ முக்கியமல்ல. அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் நலன் மட்டுமே முக்கியமானது.

உலக நாடுகள் எங்காவது குண்டுத்தாக்குதலோ, அல்லது கடத்தல் நாடகமோ நிகழ்ந்துவிட்டால் உடனடியாக முண்டியடித்துக் கொண்டு, பயங்கரவாதமெனக் கண்டிக்கும் அமெரிக்கா, மொஸ்கோ பணயக்கைதிகள் விவகாரத்தைப்பற்றி மிக மெதுவாகவே தனது கருத்துக்களை வெளியிட்டது. அதுவும் அமெரிக்க ஜனாதிபதி வில்லியம் புஷ் வெளித்தோன்றி,


பணயக்கைதிகளை மீட்கப் புறப்பட்ட ரஷ்ய வீரர்கள்.

ஊடகங்களுக்கு காட்சிப்படுத்தி, பேட்டியளிக்காததுடன், அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் கொலின் பவல் மட்டுமே முதலில் கருத்து வெளியிட்டார். அதுவும் மொஸ்கோ நகரமும் ரஷ்ய மக்களும் மிக நெருக்கடியான துயரத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும்போது, கொலின் பவல் குறிப்பிட்டார். “இப்பணயக்கைதிகள் விவகாரம் சுமுகமாக தீர்க்கப்பட்டு விடும்” இது எப்படிச் சாத்தியப்படும் என்பதே சந்தேகம் வலுக்கக் காரணமாகும்.

செச்னியப் போராளிகள், செச்னியாவிலிருந்து ரஷ்யப்படைகள் வாபஸ் பெறப்பட வேண்டுமென கோரிக்கை விட்டிருந்தமை, எப்படி சுமுகமாகும் என்பதே பிரதான கேள்வியாகும். தற்கொலைத் தாக்குதலுக்கு தயாரான போராளிகளின் அணுகுமுறை செச்னியாவிலிருந்து ரஷ்யப் படை விலகல், சுமுகமான தீர்வை ஏற்படுத்துமென கொலின் பவல் கருதினார்போல் தெரிகிறது.

மேலும் அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய இரு நாடுகளின் தூதரகங்களும், அதன் தூதுவர்களும் இவ்விவகாரத்தை மையப்படுத்திய ராஜதந்திர நகர்வுகளை முடுக்கிவிட்டிருந்தனர். செச்னிய மிதவாத தலைமையுடனும், போராளிகளின் தலைமைகளுடனும், சுமுகமான அல்லது நல்லிணக்கமான அணுகுமுறைகளை ஏற்படுத்துவதுபோலும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. மாறாக புட்டினுடனோ அல்லது ரஷ்ய மக்களுடனோ எந்தத் தொடர்பையும் ஏற்படுத்த முயலாத மேற்குலகம், செச்னியாவுடன் நெருக்கத்தை அதிகரித்தமை அதன் மீதான சந்தேகத்தை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது.

செச்னியப் போராளிகளைக் கண்டிக்க முயலாத வில்லியம் புஷ், இவ்விவகாரத்திற்கும் அல்கெய்டாவுக்கும் தொடர்பு உண்டு எனக் கூறியிருந்தார். உலகில் எங்கு அமெரிக்காவுக்குப் பாதகமான செயல் நிகழுகிறதோ, அங்கு அல்கெய்டா விசேட அதிகாரம் பெற்ற அமைப்பாக புஷ்ஷுக்குத் தென்படும்.

எனவே மேற்குலகம் திட்டமிட்டு

**K.T.கணேசலிங்கம்**

புட்டினுக்கு ஏற்படுத்திய நெருக்கடியே மொஸ்கோ பணயக் கைதிகள் நாடகம். ஆனால், மேற்கு எதிர்பார்த்ததற்கு மாறாக, புட்டின் செயற்பட்டு, மேற்கின் தந்திரோபாய நகர்வை முறியடித்துவிட்டார். அவ்விவகாரம் முழுமையாக முடிவுக்கு வந்து விட்டதாக இல்லை. ஏனெனில் ரஷ்ய இராணுவம் பாவித்த வாயு எந்த வகை என்பதே புதிய சர்ச்சையாகும்.

பணய நாடகத்தின் வெற்றி என்பதைவிட - விஷ வாயு என்பதே புதிய அரசியல் சர்ச்சையாகவுள்ளது. புட்டின் மேற்கை முறியடித்துவிட்டாலும், முழுமையாக அவ்விவகாரத்திலிருந்து மீட்சி பெறவில்லை. புட்டின் இரண்டாவது தடவையாக ரஷ்ய மக்களிடம் மன்னிப்புக் கோரியுள்ளார்.

முதல் தடவை - நீர்மூழ்கி அழிந்தபோது ஏற்பட்ட எதிர்ப்பு அலையை தணிக்க மன்னிப்புக் கோரியிருந்தது நினைவுகூரத்தக்கது. ஆனால், தற்போதைய சம்பவம் ரஷ்யர்களால் நேரடியாகப் பார்க்கவோ, உண


பிளயர்

ரவோ முடிகிறது மட்டுமல்ல, மேற்கின் ஊடகங்கள் தீவிரமாக புட்டினுக்கு எதிரான பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன. அதனால் புட்டின் ரஷ்ய மக்களின் ஆத்திரத்தையும், எதிர்ப்பையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

மறுபுறமாக நோக்கினால் புட்டின் ஏற்படுத்தியுள்ள அரசியல் - புதிய அனுபவமாகவும், உதாரணமாகவும் கொள்ளப்படுவதுடன் - மேற்கு, ரஷ்யாவைக் கணக்குப் போடுவதில் இனிமேல் நிதானத்தைக் கடைப்பிடிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இரண்டாவது - செச்னியப் போராளிகள் போன்று மேற்கொள்ள முயலும் எந்தவிதத் தாக்குதலுக்கும் புட்டினின் பாணியில் பதில் அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்லாமியத் தீவிரவாதத்தின் நடவடிக்கைக்குப் பதிலாக புதிய மாற்று நடவடிக்கை ஒன்றுக்கு உலக நாடுகள் தயாராவது இயல்பானது.


மூன்றாவது - செச்னியப் போராட்டம் பயங்கரவாதமாக, புட்டினால் வடிவமைக்கப்பட்டுள்ளமை, மேற்கின் பாணியில ரஷ்யப் பிராந்தியத்தைக் கையாள ரஷ்யாவுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது என்பதைக் காட்டுகிறது. அமெரிக்கா, செச்னியப் போராட்டத்தை தீவிரமானதாக மட்டும் கருதுகிறதேயன்றி - அதனைப் பயங்கரவாதமாக வரையறுக்காத நிலைமை கேள்விக்குட்படுவதுடன் அமெரிக்காவின் முகம் ரஷ்யாவால் தோலுரித்துக் காட்டப்பட்டுள்ளது.

நான்காவது - செச்னியா மீது ரஷ்யா தீவிர தாக்குதலை நடாத்த இச்சம்பவம் அங்கீகாரம் அளித்திருப்பதுடன், மிதவாத அரசியல் தலைமையான அசா்மன் மச்சடோன, ரஷ்யாவுடன் நிபந்தனை அற்ற பேச்சுக்கு தயாரென அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். சாராம்சத்தில் புட்டின் இவ் விவகாரத்தினால் உள்ளூரில் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தாலும் பிராந்திய, சர்வதேச நிலைகளில பாரிய அரசியல் திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளார்.

அது ரஷ்யாவின் உலகளாவிய அரசியல் அதிகாரப் போட்டித் தன்மையின் சமநிலையைக் காட்டுகின்றது. தனித்து ஒரு சில அரசுகள் விரும்புகின்ற திசைக்கு உலகத்தை நகர்த்த முடியாது என்பதனை ரஷ்யா மீண்டும் ஒரு தடவை நினைவுபடுத்தியுள்ளது.

எனவே விளாடிமிர் புட்டின் அமெரிக்காவின் பல தடைகளைத் தாண்டி, அல்லது முறியடிப்புகளை மேற்கொண்டு வெற்றியை அடைந்தாலும் பணயக் கைதிகள் விவகாரம் இன்னுமே முடிவுக்கு வந்துவிடவில்லை. விஷவாயு என்ற செய்தியைப் பரப்பிவரும் மேற்குலகம், அதனைச் சாட்டாகக் கொண்டு, ஒரு பக்கம் ரஷ்யாவின் அதிகாரத்தை அல்லது விளாடிமிர் புட்டினை கேள்விக்குறி ஆக்கும்.

மறுபுறம் - ஈராக் விவகாரத்தை முதன்மைப்படுத்த முயலும் என்பதே தற்போதைய அரசியல் நிலைப்பாடாகும.



# சிறுவர் அரங்கம்

## வார்த்தை விளையாட்டு –05

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 வ | | |
| | | 4 | | |
| 5 | தி | | 6 | |
| 7 | | 8 | | சி |
| | | வ | | 9 |
| | 10 | | | ன் |

முழுப் பெயர் : ........................................

கற்கும் பாடசாலை : ........................................

கற்கும் தரம் : ........................................

முகவரி : ........................................

........................................ ........................................

கையொப்பம் திகதி

### இடமிருந்து வலம்

1. நாளை மறுநாள் வரும் பண்டிகை.
3. காற்று.
4. விவசாயத்தை இப்படியும் சொல்லலாம்.
5. அரைப் பகுதி.
8. கோபம் குழம்பியுள்ளது.
10. சூரியனின் மறுபெயர்.

### மேலிருந்து கீழ்

2. மகாகவி.
4. கை.
6. காடு.
7. கறுப்பு நிறப் பறவை.
8. முனிவர்கள் செய்வது. *(கீழிருந்து மேலாக)*
9. அழகிய மிருகம்.

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்கு பற்றலாம்.

மேற்காணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில்,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய இறுதி நாள்:- 06-11-2002

சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

## வார்த்தை விளையாட்டு - 4

சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசுபெறத் தெரிவுசெய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு -*
**யேசுதாசன் மேரி றொசிற்றா**
சின்னத்தம்பி அவனியூ,
மானிப்பாய்.

*2ஆம் பரிசு -*
**கிருஸ்ணரூபன் நிருஜன்**
மடத்தடி, சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி.

*3ஆம் பரிசு -*
**மகாராசா அனுத்திஜா**
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை

# My Pet



My pet is a puppy. The colour or its coat is brown. So I named it Lucky. He is very fat and healthy. He is always active and alert. He is very playful. He moves freely in our home. He listents carefully at strange noises. He plays with small things and carries them in his mouth. He ways his tail happily to welcome me from school and tution. He barks fiercely at nights. I feed him with rice,fish,meat and milk. Every one in our house loves him dearly.

T.Pathmalatha
Grade-10
Methodist Girls High School, Pointpedro.

## எலியும் தொலைக்காட்சிப் பெட்டியும்



மாமாவிடம் ஒரு தொலைக்காட்சிப் பெட்டி இருந்தது. அது வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி. எல்லா நிறப் பொருட்களையும் அதில் பார்க்கலாம். பச்சை இலைகளைப் பார்க்கலாம். நீல வானத்தைப் பார்க்கலாம். சிவப்பு மலரைப் பார்க்கலாம். வெண்ணிற ஆடையைப் பார்க்கலாம்.

ஒரு நாள் அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வேலை செய்யவில்லை. மாமா இயக்கிப் பார்த்தார். இயங்கவில்லை. வெளிச்சம் வரவில்லை. சத்தமும் வரவில்லை.

மாமா கவனித்துப் பார்த்தார். அதனுள்ளே ஓர் எலி நுழைந்துவிட்டது. எலியை எப்படி வெளியே கொண்டு வருவது? அதைக் கலைத்தல் கூடாது. வெருட்டுதல் கூடாது. அப்படிச் செய்தால் எலி ஆபத்து உண்டாக்கி விடும். உள்ளே இருக்கும் பொருட்களை உடைத்து விடும். பல்லினால் கடித்து விடும்.

என்ன செய்வது? மாமா யோசித்துக் கொண்டிருந்தார். மாமி ஓர் உபாயம் செய்தார். ஒரு மசாலை வடையை கொண்டு வந்தார். தொலைக்காட்சிப் பெட்டியின் வெளியில் வைத்தார். எலி ஒரு துவாரத்தின் வழியாகப் பாய்ந்து வந்தது. மசாலை வடையைக் கௌவிக் கொண்டு ஓடியது.

அந்தத் துவாரத்தை மாமா அடைத்தார்.

**பேராசிரியர் சபா.ஜெயராசா**



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர்:-
**சிவாயனி பாஸ்கரன்**
கற்கும் பாடசாலை:-
யாழ்.கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
கற்கும் தரம்:- 5
ஆர்வமுள்ள துறைகள்:-
புதிர்கள், சித்திரம், சிறுகதை வாசித்தல்.

முழுப்பெயர்:-
**விஷ்ணுராஜா அருணகிரிநாதன்**
கற்கும் பாடசாலை:-
யாழ்.இந்து மகளிர் கல்லூரி
கற்கும் தரம்:-6
ஆர்வமுள்ள துறைகள்:-
கணினி கற்றல், தொலைக்காட்சி பார்த்தல், கதைப்புத்தகம் வாசித்தல்.





முழுப்பெயர்:-
**சுமங்கலி கந்தசாமி**
கற்கும் பாடசாலை:-
யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி
கற்கும் தரம்:-10
ஆர்வமுள்ள துறை:-
பொதுஅறிவு.

முழுப்பெயர்:-
**நாகவதனி மாணிக்கராசா**
கற்கும் பாடசாலை:-
யாழ்.தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி, தெல்லிப்பழை.
கற்கும் தரம்:- 4
ஆர்வமுள்ள துறைகள்:-
கல்வித்துறை, முத்திரை சேகரித்தல்



## பழமொழிகள்

☆ அழுதபிள்ளை பால் குடிக்கும்.
☆ ஆழம் அறியாமல் காலை விடாதே.
☆ இக்கரைக்கு அக்கரை பச்சை.
☆ உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
☆ கழுதைக்கு தெரியாது கற்பூர வாசனை?
☆ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

து.வீதுஷன், தரம் 3,
யா/இந்து ஆரம்ப பாடசாலை.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இது தான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
**நமது ஈழநாடு**
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்


முழுப் பெயர் :........................................
கற்கும் பாடசாலை :........................................
கற்கும் தரம் :........................................
வீட்டு முகவரி :........................................
பிறந்த திகதி :........................................
ஆர்வமுள்ள துறைகள் :........................................
:........................................

................ ............................
திகதி ஒப்பம்

........................... ........................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

# நிலத்துக்குக் கீழே ஒரு உலகம்


மனிதரைப்போல் நுண்ணறிவும், திறமையும், கடின உழைப்பாலும் வாழும் ஓரினம் நிலத்துக்கடியில்



இருப்பது விநோதமானது தானே? எம்மைப்போலவே குழுக்களாய் சமுதாய வாழ்க்கை வாழும் எறும்புகள் தான் இவை. ஒவ்வொரு எறும்பும் நன்னிலையில் வாழ, தமது செயற்பாடுகளைப் பங்குபோட்டு, செம்மையாய்ச் செய்து, ஒன்றை ஒன்று சார்ந்து வாழும் வாழ்க்கை உன்னதமானது. பல சிற்றறைகளைப் பாதைகளால் ஒன்றிணைத்து, தம் வாழிடங்களை நிலத்துக்கீழ் நிறுவிக்கொள்ளும் எறும்புகளின் வீடுகள், அழகாக நிர்மாணிக்கப்பட்ட நம் வீடுகளை ஒத்தவை.

ஆயிரக்கணக்கான எறும்புகள் குழுக்களாக வாழ்கின்றன. இவற்றுள் மிகப்பெரியது அரசி ஆகும். அரசி ஆடம்பரமான அறையில் இருக்கும். முட்டையிடுவதே இதன் தொழிற்பாடு. புதிய இராணிகளும், ஆண் எறும்புகளும் தோன்றி, சிறகு முளைத்ததும் பறந்து சென்று தமக்கென புதிய குடும்பங்களைத் தோற்றுவிக்கும்.

அரசி இட்ட முட்டைகள் பொரித்ததும் அவற்றைப் பெண் வேலையாட்கள் மிகச் செம்மையாகக் கவனித்துக் கொள்ளும். அதுமட்டுமா, தம் இருப்பிடத்தைத் தூய்மைப் படுத்தியும், மற்றவற்றிற்கு உணவளித்தும், மற்றும் சேமித்தும் பல்வேறுபட்ட வேலைகளை மிகச் சுறுசுறுப்பாகச் செய்வதைக் கண்டால் ஆச்சரியப்படுவீர்கள். இவை தம் வாழ்நாளில் என்றுமே நித்திரை கொள்வதில்லை என்றால் நம்புவீர்களா? அது மட்டுமா? தம்மை விடப் பல மடங்கு கூடிய சுமையைக் கொண்டு செல்லும் ஆற்றலும், தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு உணவில்லாமலும் இருக்கக் கூடியவை. இவர்களுக்கோ பல வேலைகளைச் செய்து முடிக்க வேண்டியுள்ளது. முட்டைகள் இட்டதும் அவற்றை உரிய இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும், அவ்விடங்களை நன்கு பராமரிக்க வேண்டும். பொரித்த குஞ்சுகளுக்கு உணவளித்துப் பாதுகாக்கவேண்டும்.




உறங்கு நிலையில் உள்ள குஞ்சுகளைத் தகுந்த இடத்தில் மீண்டும் கொண்டு சென்று விடவேண்டும். விவசாயி எறும்புகள், சேகரித்துக் கொண்டுவந்த உணவுகளைத் தகுந்த இடங்களில் சேமித்து வைக்க வேண்டும். ஒவ்வோர் வகைப் பதார்த்தத்தையும் வைக்க வெவ்வேறு அறைகள் உள்ளன.

மனிதன் இயற்கையை வென்று பயன்படுத்தத் தொடங்கியபோது நாகரிகமடைந்தான் என வரலாறு கூறுகின்றது. ஆனால் எறும்புகளும் தமக்குத் தேவையான உணவுகளை தாமே உற்பத்தி செய்து கொள்ளும் ஆற்றலுடையவைதான் இவை. வெட்டும் **(Leaf Cutter)** எறும்புகள் ஒருவகை பங்கசுக்களைக் குறிப்பிட்ட அறைகளில் வளர்த்து தம் இளங்குஞ்சுகளுக்கு உணவளிக்கின்றன.

பலவகை எறும்புகள் அபிட்ஸ் **(appids)** என்னும் பூச்சியினை வளர்க்கின்றன. இவ் அபிட்ஸ் ஒருவகை இனிப்புப் பதார்த்தத்தை சுரக்கும். எவ்வாறு மனிதன் பசுவிலிருந்து பாலைக் கறந்து எடுக்கிறானோ அவ்வாறே எறும்புகள் அபிட்ஸிலிருந்து இந்த இனிய சுரப்பைப் பெற்று, உண்டு மகிழ்கின்றன.

எறும்புகள் தம் உணர்கொம்புகள் மூலம் சூழலை மணந்து, உணர்ந்து கொள்கின்றன. வரிசையாய்ச் செல்லும் எறும்புகள் தனித்து உறவாடுவதைக் கண்டிருப்பீர்கள். இந்நடத்தைகள் பற்றி ஆராய்ந்து பல விஞ்ஞானிகள் தாம் கண்டவற்றையும், உய்த்தவற்றையும் வெளியிட்டிருக்கிறார்கள்.

ஜெரால்ட் டியூரல் என்ற இயற்கை விஞ்ஞானி, தான் கண்ட இரு எறும்பினங்களுக்கிடையேயான போரைப்பற்றிச் சொல்லும்போது, அங்கு நடந்த பல வியப்பான சம்பவங்களை விபரித்துள்ளார், வேவு பார்க்கும் எறும்புகள் பற்றியும், மற்றும் படைநடத்தும் எறும்புகள், வழிகாட்டும் எறும்புகள் பற்றி எல்லாம் பல தகவல்களைக் கூறியுள்ளார். பல விஞ்ஞானிகள் எறும்புகளின் வாழ்க்கையினை ஆராய வேண்டிய முக்கியத்தை உணர்ந்துள்ளனர். பல விடயங்கள் இன்றும் கேள்விக்குறியாகவே இருக்கின்றன. எதிர்காலத்தில் உங்களில் ஒருவராயினும் இவற்றை ஆராய்ந்து, அறிந்து உலகத்திற்கு வெளிப்படுத்துவீர்கள்தானே!

**- சேரலாதன்.**

# கர்வம் கொண்ட கலைமான்

ஒரு கலைமான் தெளிந்த சுனையென்றில் தண்ணீர் குடித்துக் கொண்டு இருந்தது. அப்பொழுது தனது பரந்த கொம்புகளின் அழகைத் தண்ணீரில் பார்த்து பெருமிதம் கொண்டது. ஆனால், தனது மெலிந்த கால்கள் அந்த அழகைக் கெடுப்பதாக நினைத்து, "ஆகா எவ்வளவு கம்பீரமான பரந்த கொம்புகள்! எவ்வளவு அழகாய் என் தலைமீது அவை படர்ந்து நிற்கின்றன. என் முகத்திற்கு அவை கொடுக்கும் அழகு தான் என்ன! ஆனால் இந்தச் சூம்பிப் போன கால்களைப் பார்க்கும் போதுதான் எனக்கு வெட்கமாய் இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டே திரும்பிப் பார்த்தது. பல வேடர்களும், வேட்டை நாய்களும் தன்னை நோக்கி ஓடி வருவதை அது கண்டது. உடனே எடுத்தது ஓட்டம்! அந்த வேட்டைக் காரர்களிடம் இருந்து தப்புவதற்காக எந்தக் கால்களைக் கண்டு வெட்கமடைந்ததோ, அந்தக் கால்கள் உதவி செய்தன. கால்களில் உதவியினால் காட்டுக்குள் நுழைந்தது. ஆனால் காட்டுக்குள் தொடர்ந்து வேகமாய் ஓட முடியாதபடி அதன் பரந்த கொம்புகள் புதர்களிலும் கிளைகளிலும் முட்டி இடையூறு செய்தன. இதனால் சீக்கிரமாய் நாய்கள் வந்து மானைப் பிடித்தன. சாகும் போது "நான் முட்டாள். இந்தக் கொம்புகள் இல்லாதிருந்தால் இந்தக் கால்கள் என்னைக் காப்பாற்றி இருக்குமே! என்று ஏங்கி உயிர் விட்டது.

**தகவல்: சரண்யா இரத்தினசிங்கம், தரம் - 6, யா/வேம்படி மகளிர் கல்லூரி.**

## சர்வதேச தினங்கள்

ஏப்ரல் 7 ஆம் திகதி -
உலக சுகாதார தினம்
செப்டம்பர் 8 ஆம் திகதி -
சர்வதேச எழுத்தறிவு தினம்
அக்டோபர் 1 ஆம் திகதி -
சிறுவர்தினம், முதியோர் தினம்.
அக்டோபர் 6 ஆம் திகதி -
உலக ஆசிரியர் தினம்.
அக்டோபர் 15 ஆம் திகதி -
உலக வெள்ளைப்பிரம்பு தினம்
அக்டோபர் 24 ஆம் திகதி -
ஐக்கிய நாடுகள் தினம்.
அக்டோபர் 31 ஆம் திகதி -
சிக்கன தினம்.
டிசம்பர் 10 ஆம் திகதி -
மனித உரிமை தினம்.
டிசம்பர் 12 ஆம் திகதி -
எயிட்ஸ் தினம்.

செ.திருக்குமரன்
யா/யூனியன் கல்லூரி

## கண்டுபிடியுங்கள்

கீழே சில விலங்குகளும், அவற்றின் காலடிகளும் காணப் படுகின்றன. விலங்குகளுக்குப் பொருத்தமான காலடிகளைத் தேடிக் கண்டுபிடியுங்கள்.



நமது **ஈழநாடு**

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*செயலில் இறங்கும் போதே பிரச்சினைகளும் தோன்றும்.*

*- மார்க் டூர்*

# நமது நோக்கு

## செயலணிக்கான எதிர்பார்ப்பு!

போரால் பாதிக்கப்பட்ட வட- கிழக்குப் பகுதிகளுக்கான - புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றத் திட்டங்களை முன்னெடுப்பதற்கான கூட்டுச் செயலணி பற்றித் தாய்லாந்தில் பேசப்பட்டுள்ளது.

இச் செயலணியின் இறுதிவடிவம் எவ்வாறமையும் என்ற ஆராய்வில் - இருதரப்பினரும் ஒருமித்த கருத்தினையும் எட்டியுள்ளதாகத் தெரிகின்றது.

இனிவரும் காலத்தில் - வடக்கு, கிழக்கின் அபிவிருத்தியை செயற்படுத்தப்போகும் இச் செயலணிக் குழுவின் உருவாக்கமானது விரைவில் எதிர்பார்க்கப்படும் நிலையில், சமாதானத்திற்கான நகர்வில் குறிப்பிடத்தக்க வெற்றியாக இது அமையவுள்ளது.

இதுவரை காலமும் - போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கெனத் திரட்டப்பட்ட, பெறப்பட்ட நிதியினையும், உதவிகளையும் - தமிழ் மக்கள் அனுபவித்திராத நிலையில் - விடுதலைப்புலிகள் பங்கேற்கும் கூட்டுச் செயலணியின் முக்கியத்துவமானது- த்மிழ் மக்களைப் பொறுத்தளவில் மிகப் பெரும் வரலாற்றுத் தேவையை தீர்க்குமெனவே எதிர்பார்க்கப்படுகின்றது.

போரின் வடுக்களைத் தனது ஒவ்வொரு அணுக்களிலும் தாங்கி நிற்கும் தமிழ் மண்ணும், மக்களும்- வேண்டி நிற்கும் பொருளாதார வளர்ச்சியையும், சுபீட்சத்தையும் பெற்றுத்தர கூட்டுச் செயலணி தீவிரமாக முனையவுள்ளது.

எமது தேவைகளை அறிந்த எம்மவர்கள் பங்கேற்கும் இக் குழுவானது- வடக்கு-கிழக்கின் வளர்ச்சியைத் தனது நீண்ட கால நோக்கிலும், மக்களது உடனடித் தேவைகளைக் காலகதியில் நிறைவேற்றும் வகையிலும் செயற்படும் என்ற நம்பிக்கையும்,

ஊழல், மோசடிகளற்ற, நிர்வாகக் குளறுபடிகள் தவிர்த்த நேர்மையான பணியை கூட்டுச் செயலணி செயற்படுத்தும் என்பதும் உறுதியானதாகும்.

அதேவேளை-சர்வதேச ரீதியில் இது வரை காலமும் விடுதலைப்புலிகள் மீது சுமத்தப்பட்டு வந்த 'பயங்கரவாதிகள்' என்ற அவதூறுப் பட்டத்தையும், அவர்கள் மீது கடந்த அரசாங்கங்களால் ஏற்படுத்தப்பட்டு வந்த பிரசார அழுத்தங்களையும் கூட்டுச் செயலணியானது நீக்கும் என்பதும்- அரசியல் முக்கியத்துவமுடையதாகும்.

விடுதலைப்புலிகளே - தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை சர்வதேசத்திற்கு வலியுறுத்தவும், தமிழ் மக்களின் நல்வாழ்வுக்கான அவர்களது அர்ப்பணிப்பை அங்கீகரிப்பதாகவும் இந்த முயற்சி அமையவுள்ளது.

எதிர்வரவுள்ள உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு, விடுதலைப் புலிகளின் பிரசன்னமும் அவசியம் என்ற நிலைக்கு சர்வதேசமும் அரசாங்கமும் வந்திருப்பது - இந்த அங்கீகாரத்தின் உண்மைத் தன்மையை தெளிவாக்குகின்றது.

இது இவ்வாறிருக்க- கூட்டுச் செயலணியின் உருவாக்கத்தைக் குழப்ப முனையும் சக்திகளும் இல்லாமலில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், தெற்கிலும், கிழக்கிலுமுள்ள இனவாத சக்திகளும் கூட்டுச் செயலணியின் உருவாக்கம் பற்றியும், அதன் அரசியல் அமைப்பு வரையறைகள் பற்றியும், செயற்பாடுகள் பற்றியும் ஆராய்ந்து வருவதோடு- கூட்டுச் செயலணியைத் தடுப்பதற்கு தம்மாலான முயற்சிகளிலும் இறங்கத் தயாராகி வருகின்றன.

உண்மையில் கூட்டுச் செயலணியின் அபிவிருத்தி நோக்கானது- போரின் நேரடிப் பாதிப்புக்குள்ளான வட, கிழக்கையும் கடந்து- வறட்சியாலும், அரசியல் காரணிகளாலும் தெற்கில் கவனிப்புக் குறைந்து கிடந்த-அம்பாந்தோட்டை, மொனறா கலை மாவட்டங்களையும்- இன்னும் புத்தளம் மாவட்டத்தையும் கொண்டதாக, அவற்றையும் வளர்ச்சிப் போக்கினுள் கொண்டு வரக்கூடியதான வகையில் அமைகையில்-அதனையும் குழப்ப நினைப்பவர்களை என்னவென்று சொல்வது?

இந்தவகையில்-கூட்டுச்செயலணியின் நோக்கமும் செயற்பாடும்-நிரந்தர அமைதிக்கான அடித்தளமாக அமையுமென எதிர்பார்க்கப்படும் வேளையில்- அதனை முடக்குவோமென வரிந்து கட்டுபவர்களை சமாதானத்தின் எதிரிகள் என்றே அப்பட்டமாகக் கூறலாம்.

# படையினர் தடுத்து நிறுத்தியது தொடர்பாக எம்.பியிடம் பொலிஸார் விபரம் திரட்டினர்!

## பிரதமர் ரணிலின் விசேட உத்தரவின் பேரில்

(அம்பாறை)

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கூட்டத்துக்குச் சென்ற மட்டு. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை படையினரால் தடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக உயர் பொலிஸ் அதிகாரிகள் குழு நேற்றுமுன்தினம் அவரிடம் தகவல்களைச் சேகரித்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கட்டளைப்படி மட்டு. மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாவட்ட பயங்கரவாதக் குற்றத் தடுப்பு பொலிஸ் அதிகாரி ஆகியோரைக் கொண்ட குழுவே கிருஷ்ணபிள்ளை எம்.பியின் சாட்சியங்களைப் பதிவு செய்தது.

அத்துடன் அவரது வாகனச் சாரதி, உதவியாளர்களிடமும் பொலிஸ் அதிகாரிகள் மேலதிக தகவல்களைத் திரட்டினர். நேற்றுமுன்தினம் காலை 11.45 மணியளவில் ஆரம்பித்த இந்த தகவல் சேகரிக்கும் சந்திப்பு மாலை 4 மணிவரை நீடித்திருந்தது.

முடிவில் இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்போவதாக பொலிசார் கூறியிருந்தனர்.

## வெடிபொருளுடன் விளையாடிய சிறுவன் குண்டுவெடித்துப் பலி!

### வவுனியாவில் சம்பவம்

கைவிடப்பட்ட நிலையில் இருந்த மோட்டார்க் குண்டு ஒன்றை சிறுவன் ஒருவன் குத்தி உடைக்க முற்பட்டபொழுது, அக்குண்டு வெடித்ததில் அச்சிறுவன் மரணமான சம்பவம் வவுனியா நெடுங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நெடுங்குளத்தைச் சேர்ந்த ஆர்.கே.நிலந்த ராஜகருண என்ற 13 வயதுடைய சிறுவனே மரணமானவராவார்.

இராணுவத்தினரும் பொலிசாரும் திறந்த வெளியொன்றில் ஆயுதப் பயிற்சி மேற்கொண்டு வருவதாகவும், அந்தப் பகுதியிலே இக்குண்டைச் சிறுவன் எடுத்து உடைத்தபொழுதே மரணம் சம்பவித்ததாகவும் தெரிவியவருகிறது.

## கொழும்பு பல்கலையில் மோதல் ஒன்பது மாணவர்கள் காயம்!

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதல்களில் காயமடைந்த 9 மாணவர்கள் தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று நடைபெறவிருந்த மாணவர் மன்றத் தேர்தல்கள் தொடர்பாக இரண்டு மாணவர் குழுக்கள் பங்குபற்றிய விவாதத்தைத் தொடர்ந்து, இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று உபவேந்தர் அறிவித்துள்ளார்.

# தெல்லிப்பளை வைத்தியசாலை ஜனவரியில் சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கும்!

## சுகாதாரப் பகுதியினர் நம்பிக்கை

(வலி - வடக்கு)

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலை எதிர்வரும் ஜனவரி மாதமளவில் தனது சொந்த இடத்தில் இயங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாக சுகாதாரப்பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

வலிகாமம் பகுதி மக்களுக்கு பெரிதும் சேவையாற்றி வந்த இவ்வைத்தியசாலை இராணுவ நடவடிக்கைகள் காரணமாக கடந்த 10 வருடங்களுக்கு மேலாக செயலிழந்து சின்னா பின்னப் பட்டுக்கிடக்கிறது.

இவ்வைத்தியசாலைளை மீளப்புனரமத்து செயல்படவைக்க பலதரப்பிலிருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதன் பயனாக- தற்போது இவ்வைத்தியசாலை வளவில் அமைந்த புற்றுநோய் சிகிச்சை நிலையக் கட்டடம் புனரமைக்கப்பட்டு இயங்கக்கூடிய நிலையில் உள்ளது. ஏனைய வைத்தியசாலை கட்டடங்கள், வார்ட்டுகள் யாவும்- கூரைகள், யன்னல்கள் மட்டுமே இல்லாமல் கட்டடங்கள் நல்ல நிலையில் உள்ளதாக அங்கு சென்ற சுகாதார வைத்திய அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

புனரமைக்கப்பட்ட புற்றுநோய் சிகிச்சை நிலையத்தில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தையும், புற்று நோய் சிகிச்சைப் பிரிவையும் உடனடியாக ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கின்றபோதும் குடிநீர், மின்சார வசதியின்மை தடையாக இருப்பதாக கூறப்படுகிறது.

தற்போது கட்டடத் திணைக்களத்தினர் இங்கு ஓர் குழாய்க் கிணற்றை அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர்.இலங்கை மின்சார சபையுடன் தொடர்பு கொண்டு மின்சார வசதி செய்யவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வேலைகள் பூர்த்தியானதும் புற்றுநோய் சிகிச்சைப்பிரிவும், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகமும் அங்கு செயற்படக்கூடிய நிலை ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்படி வைத்தியசாலை இயங்குவதற்கு இராணுவத்தரப்பு பச்சைக்கொடி காட்டுகின்ற போதும், அதிகாரிகளின் அசமந்தப் போக்காலேயே தாமதம் நிலவுவதாக சுகாதாரப் பகுதியினர் குறைகூறுகின்றனர்.

(105)

# அழிந்த பனை வளத்தை ஈடு செய்ய கைதடியில் 25,000 பனம் விதைகள் நடுகை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கை காரணமாக அழிக்கப்பட்ட பனை வளத்தை ஈடுசெய்யும் முகமாக பத்து லட்சம் பனை விதைகள் நாட்டும் திட்டம் ஒன்று குடாநாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபையால் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டுவரும் 10 இலட்சம் பனம் விதை நடுகைத் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவில் கைதடி மேற்கு ஊரி மேட்டு நிலத்தில் 25000 பனம் விதை நடுகை ஆரம்பிக்கப்பட்டது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் கடந்த 28ம் திகதி ஊரியில் இடம் பெற்றது. இவ்வைபவத்தினை தென்மராட்சி கோட்டக் கொள்ளை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் செ.சிறிநாத் மங்கள விளக்கேற்றி நடுகையை ஆரம்பித்து வைத்தார்.

போர்ச் சூழ்நிலை காரணமாக இப்பிரதேசத்தில் பல இலட்சக்கணக்கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இவ் அழிவானது இப்பிரதேசத்திலுள்ள மக்களுக்கு பொருளாதார ரீதியாக, பாரிய இழப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதனை ஈடு செய்வதற்கு இந்நடுகைத் திட்டம் அவசியமானதாகும். இது போன்ற நடுகைத் திட்டத்தினை பிரதேசம் முழுவதும் மேற்கொண்டு, இழந்ததை ஈடுசெய்வதுடன், இவ்வளத்தைப் பெருக்கிட எமது அடுத்துவரும் சந்ததியினருக்கு வழங்க வேண்டும் எனவும், கொள்கை முன்னெடுப்புப் பிரிவுப் பொறுப்பாளர் செ.சிறிநாத் தெரிவித்தார்.

# குறைதீர் மன்றம்



1989-1990 காலப் பகுதியில் இடம் பெயர்ந்து இருப்பிடங்களை விட்டு வெளியேறினோம். 10 வருடங்களின் பின்பு மீள் குடியமர்த்தப்படும் கட்டுவன் மேற்குப் பகுதி மக்களாகிய எமக்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவில்லை. இதனால் எமது பிரதான தொழிலான விவசாயம் பாதிப்படைந்து, வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்றது. பாதிப்படைந்த கிராமங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் மின்சாரம் வழங்கப்படும் என பத்திரிகைகள் வாயிலாக அறிகிறோம். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

கே.மகேந்திரன்,
கட்டுவன் வாழ்
மக்கள் சார்பாக.

**நமது ஈழநாடு**

தங்கள் விடயம் தொடர்பாக மின்சார சபையுடன் நமது ஈழநாடு தொடர்பு கொண்ட போது, தங்களுக்கு மின்சார சபை கொழும்பிலிருந்து 2000 ஆண்டு தொடக்கம் 2001,2002 அரையாண்டுப் பகுதி வரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்றும், மீள்குடியேற்றத்துக்கு பாரிய திட்டங்கள் வகுக்கப்படும்போது மின்சாரசபைக்கு ஏதாவது நிதி ஒதுக்கீடு கிடைக்க ஆவன செய்யப்படுமாயின், அதனைத் தங்கள் பகுதிக்குரிய விசேட வேலைத் திட்டமாகக் கருதி மின்சாரசபை, கட்டுவன் பகுதியில் மின் சக்தியை வழங்க ஆவன செய்யும் என்றும் மின்சார சபைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PBB

# PALM BEACH RESTAURANT

யாழ்.மண்ணில்..... *Multi Cushion (Veg & Non Veg) Restaurant*

## சகலவிதமான சைவ - அசைவ உணவகம்

(பார்சல்களும் பெற்றுக்கொள்ளலாம்)

- முற்றிலும் குளிரூட்டப்பட்ட, தனி இடத்தில் குடும்பத்தினருடன் உணவருந்தி மகிழ்ந்திட...
- தலைசிறந்த இந்திய உணவுத் தயாரிப்பாளர்களினால் தயாரிக்கப்பட்ட உணவுகளை ருசித்திட......
- ஒருதடவை சுவைத்துப்பாருங்கள் – பின் தினமும் சுவைக்கத் தோன்றும் உங்களுக்கு...
- உல்லாசப் பயணிகள் தங்குவதற்கு குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள் வாடகைக்கும்...



**திருமண வைபவங்களா....?**

**பிறந்தநாள் கொண்டாட்டங்களா....?**

**பிரியாவிடை வைபவங்களா....?**

**விருந்துபசாரங்களா....?**

★ புரியாணி வகைகள்
★ ஃஃப்றைட் றைஸ்
★ நூடில்ஸ் வகைகள்
★ பீஸா (Pizza) உணவுகள்
★ ப்ரெஞ்ச் பழச்சாறு வகைகள்
★ றோல்ஸ் வகைகள்
★ சப்பாத்தி, பூரி மற்றும் இந்திய உணவுகள்
★ சைவ, அசைவ கறி வகைகள்
★ ஐஸ்கிறீம் வகைகள்
★ சூப் வகைகள்

**இவற்றோடு இன்னும் பல சுவையான உணவுகளுக்கு நாடுங்கள்**

**எதுவானாலும் இனிய சுவையுடைய உணவுகளுடன் நிறைவேற்றிட.......**

# பாம் பீச் றெஸ்ரோறன்ற்

**இல. 10/11, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

☎ 077-733316
077-153889

(சி-095)

**உங்களின் தேவையே - எங்களின் சேவை**

# பாலியல் வல்லுறவின் பின் படுகொலையான இளம் பெண்; விசாரணையைத் துரிதப்படுத்த வவுனியாவில் போராட்டம்!

(வவுனியா நிருபர்)

அண்மையில் கல்லுண்ட குளம் பகுதியில் இளம் பெண்ணொருவர் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப் பட்டுப் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்தக் கோரி வவுனியாவில் நேற்று அமைதிப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

கோவில் குளம் சிவன் கோவில் பகுதியில் இருந்து ஆரம்பித்த பேரணி மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் மற்றும் அரச செயலகம் என்பவற்றில் மகஜர் கையளிப்புடன் நிறைவு பெற்றது.

கல்லுண்ட குளம் மக்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இப் பேரணியின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கையளிக்கப் பட்ட மகஜரில், ஐந்து முக்கிய விடயங்களை நிறைவேற்றுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த 22ம் திகதி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தி கொல்லப்பட்ட பெண்ணின் மரணம் தொடர்பான விசாரணையைத் துரிதப்படுத்தி குற்றவாளிகளை உடன் கண்டறிந்து தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் கிராமத்துக்குள் இராணுவத்தினர் மற்றும் ஊர்காவற் படையினர் வருவதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்படி சம்பவத்தின் பின்னர் கல்லுண்ட குளம் பாடசாலை இயங்காமல் உள்ளது. மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்து பாடசாலையை மீளத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

விவசாயிகளுக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுப்பதுடன் மூடப்பட்டிருக்கும் அடரிக்குளம் வீதியையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

என அந்த மகஜரில் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றது.




வவுனியாவில் நேற்று நடைபெற்ற கண்டனப் பேரணியில் சில காட்சிகள். (படங்கள்: கனகரவி)

## அளவெட்டிப் பகுதிக்கு விரைவில் மின்சாரம்

(மல்லாகம்)

அளவெட்டிப் பகுதிக்கு கடந்த 12 வருடங்களின் பின் மீண்டும் மின் ரம் வழங்குவதற்கான நடவடிக் கைகள் மின்சாரசபையினால் எடுக்கப்படுகின்றது. இதன் முதற் கட்டமாக மின்கம்பங்கள் நாட்டப்பட்டு மின்கம்பிகள் இணைக்கப்படுகின்றன. வெகுவிரைவில் மின்சாரம் வழங்கப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(68)

## அகில இலங்கை அதிபர் சங்க பிரதிநிதிகள் குழு யாழ்.வரும்

(வடமராட்சி)

அகில இலங்கை அதிபர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் குழுவொன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர். இக் குழுவில் சங்கத்தைச் சேர்ந்த 40 அதிபர்கள் அடங்குவர்.

நாளை காலை 10 மணிக்கு இவ் அதிபர்கள் சங்க உறுப்பினர்கள் வேம்படி ம்களிர் கல்லூரியில் யாழ். மாவட்ட அதிபர்கள் சங்கத்தை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர் என அகில இலங்கை அதிபர்கள் சங்கச் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

(17)

## சாவகச்சேரி வைத்தியசாலைக்கு நீர் இறைக்கும் இயந்திரம்!

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபையினர், சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்கு 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திர மொன்றை வழங்கவுள்ளனர்.

நீர் இறைக்கும் இயந்திரத்தை வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை வைத்திய அதிகாரி கலாநிதி.கே.மயிலேறும் பெருமாள் வழங்கவுள்ளார்.

(17)

## இன்றைய நாள் இனிய நாள்

**02.11.2002 - சனிக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- தேகசுகம் நன்று, பணவரவு சமம், எடுத்த காரியம் வெற்றி, மாதா சுகக் குறைவு, கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபார நிலை சமம். |
| இடபம் | :- தேகசுகக்குறைவு, பணவரவு குறைவு, பொதுசேவையில் கெட்ட பெயர், புத்திரர் சுகக் குறைவு, கீர்த்திக் குறைவு, கல்வி முன்னேற்றம், வியாபார நிலை சமம். |
| மிதுனம் | :- தேகசுகம் நன்று, பணவரவு, தொழில் ஸ்தானத்தில் சிக்கல், மாதா தேக சுகக் குறைவு, புத்திரரால் மனஸ்தாபம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கர்க்கடகம் | :- தேகசுகம் நன்று, பணவரவு, எடுத்த காரியம் வெற்றி, காணி, வீடு வாங்கும் சிந்தனை, சகோதர அன்பு, மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| சிங்கம் | :- தேகசுகம் நன்று, வரவுக்கு மிஞ்சிய செலவு, பெண்களால் சண்டை, வாக்கு வாதம், மனச்சஞ்சலம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| கன்னி | :- தேகசுகம் நன்று, பணவரவு, மகிழ்ச்சி, உறவினர் வருகை, உயர் கல்வி முயற்சி ஏற்படல், வியாபார முன்னேற்றம் சமம். |

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.

| | |
|---|---|
| துலாம் | :- தேகசுகக்குறைவு, வீண்செலவு, எடுத்த காரியம் தடை, வீண் மனஸ்தாபம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் சமம். |
| விருச்சிகம் | :- தேகசுகம் நன்று, பணவரவு, செய் தொழில் முன்னேற்றம், தெய்வதரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| தனு | :- தேகசுகம் நன்று, பணவரவு, செய்தொழில் முன்னேற்றம், பொது சேவையில் மதிப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |
| மகரம் | :- தேகசுகக்குறைவு, வைத்தியச் செலவு, பிதாவுடன் மனஸதாபம், எதிரிகளினால் பிரச்சினை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம் |
| கும்பம் | :- தேகசுகக்குறைவு, வீண்செலவு, புதிய காரியங்களில் ஈடுபடுதல் தவிர்க்க வேண்டும், கல்வியில் ஊக்கம் வேண்டும். |
| மீனம் | :- தேகசுகம் நன்று, பணவரவு, மகிழ்ச்சி, உறவினர் வருகை, கலைநிகழ்ச்சியில் ரசனை, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம். |

## நல்லூரில் இசைப்பேருரை

கந்தசஷ்டி விழா இசைப்பேருரை நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணி மண்டபத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரை நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த இசைப்பேருரையை பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மாவால் நிகழ்த்தப்படவுள்ளது.

## சிகையலங்காரப் பயிற்சி வகுப்புக்கள்

(அரியாலை)

யாழ். கல்வி வலயத்தின் முறைசாராக் கல்விப் பிரிவினரின் சிகையலங்காரப் பயிற்சி வகுப்புக்கள் அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையத்தில் நடைபெற்று வருகின்றது. இவ் வகுப்பில் 35 யுவதிகள் பயிற்சியைப் பெற்று வருகின்றனர்

(55)

## கேதாரகௌரி பூர்த்தி விழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான கேதாரகௌரி நோன்புப் பூர்த்தி விழா எதிர்வரும் 4ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

முற்பகல் 11 மணிக்கு விசேட பூசையுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வு, நண்பகல் 1.15 மணியளவில் இடம்பெறும் நூல் பெறுதலும் அணிதலும் என்ற நிகழ்வோடு முடிவுறும்.

## கண்ணிவெடிகளற்ற 17 கிராமங்கள்; வவுனியாவில் ரீ.ஆர்.ஓ. நடவடிக்கை!

(வவுனியா)

வவுனியா தெற்கு சேமமடுப் பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனித நேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர், கண்ணிவெடிகளை அகற்றியுள்ளதால் ஏராளமான குடும்பங்கள் இப்பகுதியில் மீளக்குடியமரும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வவுனியா தெற்கில் நான்கு கிராமசேவகர் பிரிவுகளில் 17 கிராமங்கள் இவ்வாறு கண்ணிவெடி அபாயத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளன. இதனால் ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் இங்கு மீளக் குடியமர ஆயத்தமாகி வருகின்றனர். ஏற்கனவே 15 குடும்பங்கள் இப்பகுதியில் மீளக் குடியமர்ந்து நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னர் இப்பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்ததும் ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் பின் இராணுவத்தினர் இவ்விடத்திலிருந்து பின் நகர்ந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

## திருடர்கள் கைவரிசை

சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை வீதியால் சென்று கொண்டிருந்த பெண்ணின் 2 பவுண் தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இரு திருடர்கள் அறுத்துச் சென்று விட்டனர்.

பருத்திக்கலட்டி, சுன்னாகத்தைச் சேர்ந்த திருமதி வ.பார்வதி (வயது 60) என்பவரே சங்கிலியைப் பறிகொடுத்தவர் ஆவார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

## உலக இந்து மாநாடு ஆலோசனைக் கூட்டம் இன்று

உலக இந்து மாநாடு எதிர்வரும் மே மாதம் 2ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை நடைபெற இருக்கின்றது.

இம் மாநாடு சம்பந்தமாக ஆலோசனைகளைப் பெறுவதற்காக இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கின்றது. கூட்டத்தில் அமைச்சரின் ஆலோசகர் ஆர்.பேரின்பநாயகம் கலந்து கொள்ள இருக்கிறார்.

இந்த மாநாட்டில் பங்கு பற்றுவதற்கான விண்ணப்பப்படிவங்களை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் பிராந்திய அலுவலகம் அமைந்துள்ள யாழ்.மாவட்டச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## குடும்பத் தகராறின் போது விலக்குப் பிடித்தவர் காயம்

குடும்பப் பிரச்சினையால் ஏற்பட்ட சச்சரவை விலக்குப் பிடித்து விடச் சென்றவர் தலையில் அடிகாயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ்.ரவி (வயது 27) என்பவரே தலையில் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223, Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002



தாய்லாந்தின் ரோஸ் கார்டின் விடுதியின் நடை பாதையில் கருணா, பாலா, தமிழ்ச்செல்வன், ஜோய் மகேஸ்வரன்



நேற்றைய பேச்சுக்களின் முடிவில் செய்தியாளர்கள் மத்தியில் பாலா

# அரசியல் கைதிகளை விடுவிக்க புலிகள் மீண்டும் வலியுறுத்து!

## 75பேரின் விரைவான விடுதலைக்கு அரசு உறுதி

நேற்றைய பேச்சுக்களில் சிறைகளில் இருக்கும் அரசியல் கைதிகள் குறித்து ஆராயப்பட்டது. இது தொடர்பாகப் புலிகள் தரப்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது, விரைவில் 75 அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் என அரசதரப்பில் உறுதியளிக்கப்பட்டது.

இதுவரையில் இருந்த 450 அரசியல் கைதிகளில் விடுவிக்கப்பட்டவர்கள் போகத் தற்போது 193 கைதிகளே எஞ்சியிருப்பதாகவும் இவர்களில் 75 பேர் விடுவிக்கப்படவுள்ளதாகவும் அரச தரப்பினர் எடுத்துக் கூறினர். இவர்கள் மீதான வழக்குகள் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக கப்பட்டு விரைவில் விடுவிக்கப் படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது

# மேஜர் ஜெனரல் கொட்டேகொட பேச்சுக்களில் கலந்துகொள்ளவில்லை

(நொகன்பத்தமிலிருந்து நமது நிருபர் விதுர்ஷன்)

நேற்றுவரை நடைபெற்ற இரண்டு சுற்றுப் பேச்சுக்களில் இதுவரை அரச தரப்பின் ஆலோசகர் குழுவில் சென்ற மேஜர் ஜெனரல் சாந்த கொட்டேகொட பேச்சுவார்த்தை மேசைக்கு வருகை தரவில்லை.

அரச தரப்பில் கலந்து கொள்ளும் அமைச்சர்களுக்கு மேலதிகமாக ஆலோசனைக் குழு ஒன்றும் தாய்லாந்து சென்றமையும் அதில் மேஜர் ஜெனரல் கொட்டேகொட அங்கம் வகிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை தொடரும் பேச்சுக்களில் கொட்டேகொடவும் ஏனைய அரச சமாதான செயலக அதிகாரிகளும் கலந்து கொள்ளலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# சட்டங்களுக்கு அமைவாக கூட்டுச் செயலணிக் குழு

## ஒஸ்லோ கூட்டத்திற்கும் செல்லும்

(நொகன்பத்தமிலிருந்து நமது நிருபர் விதுர்ஷன்)

அரசும் - புலிகளும் இணைந்து உருவாக்கும் கூட்டுச் செயலணிக் குழு சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகவே அமைக்கப்படவிருக்கின்றது. இதனால் எதிர்காலத்தில் எந்தச் சட்டச் சிக்கல்களும் இக்குழுவுக்கு ஏற்படாது என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் நேற்றுச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் 25ஆம் திகதி ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கலந்து கொள்ள வசதியாகவே இச்செயலணிக்குழு அமைக்கப்படுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### பிரபா மீது...

வெளிவந்திருக்கும் இத்தீர்ப்பு தமிழ் மக்களுக்கு வேதனையைத் தந்துள்ளது. அமைதி முயற்சிகளின் மீதான நம்பிக்கையைக் கேள்விக்குரியதாக்குகின்றது. இது -தமிழர் தாயகப் பகுதியில் நடந்த படுகொலைகள் சம்பந்தமாகவும் அரச பயங்கரவாதச் செயல்களைச் செய்தோர் மீதும் எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுபவர்களாக எம்மை ஆளாக்கியுள்ளதாகவே நாம் கருதுகி றோம்.

சமாதானப் பேச்சுக்களில் இரண்டாம் கட்டத்தை அடைந்திருக்கின்ற இவ் வேளையில் இத்தீர்ப்பை நாம் பாரதூரமானதாகவே கருதுகின்றோம் எனத் தெரிவித்துள்ளார்.

# தென்மராட்சி மறியல் போராட்டம் இரண்டாவது நாளாக தொடர்ந்தது

## இன்று மாவட்ட அபிவிருத்திகுழுக் கூட்டத்தில் ஆராய்வு?

(சாவகச்சேரி)

நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வரும் மாபெரும் மறியற் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது. இதனால் தென்மராட்சிப் பிரதேச செயலகம் நேற்றும் முற்றாகச் செயலிழந்தது.

மீசாலை வடக்கு, மந்துவில் கிழக்கு பகுதிகளில் உள்ள சுமார் 50ற்கும் மேற்பட்ட வீடுகளில் இருந்து படையினரை வெளியேற்றக் கோரியே இந்த மறியற் போராட்டம் நடைபெற்று வருகின்றது. நேற்றைய இப் போராட்டத்தில் பிரதேச மக்கள், பொதுஅமைப்புக்கள், பாடசாலை மாணவர்கள் உள்ளடங்கலாக பல நூற்றுக்கணக்கானவர்கள் பங்குகொண்டனர்.

நேற்று 7 மணிக்கே ஆரம்பமான இந்த மறியற் போராட்டத்தின் போது 10 மணியளவில் பிரதேச செயலர் அங்கு வருகை தந்தார். இன்னும் 10 நாட்கள் கால அவகாசம் தருவதாகவும் அதற்குள்ளாவது தமக்கு சாதகமான பதிலை பெற்றுத்தருமாறும் மக்கள் தரப்பிலிருந்து கோரப்பட்டது. எனினும் இதை பிரதேச செயலர் ஏற்றுக் கொள்ளவில்லை.

இச்சமயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சம்பவ இடத்துக்கு வருகை தந்தார்.

இன்று யாழ். செயலகத்தில் நடைபெறும் யாழ். மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் இது விடயமாக பல்வேறு தரப்பினருடனும் ஆராயவதாக அவர் தெரிவித்தார்.

(29,25)

மீசாலைவடக்கு, மந்துவில் கிழக்கு பிரதேசங்களில் உள்ள தமது வாழ்விடங்களிலிருந்து படையினரை வெளியேற்றி, தம்மை மீளக் குடியமர அனுமதிக்கக் கோரி

### கிழக்கு...

அமுல் செய்ய புலிகள் தரப்பு முழுமையான அர்ப்பணிப்புடன் செயற்படும் என கேணல் கருணா உறுதியளித்தார்.

இதேவேளை- போர்நிறுத்தக் கண்காணிப்பில் ஈடுபட்டுவரும் குழுவினரின் அலுவல்களை மேலதிகமாக அதிகரித்துக்கொள்ளவும் குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மேலும் அலுவலகங்களைத் திறக்கவும்,

இரண்டு தரப்பிலிருந்தும் சிரேஷ்ட அதிகாரிகளை இன்னும் அதிகமாக போர் நிறுத்தக் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தவும் நேற்று இணக்கம் காணப்பட்டுள்ளது.

அத்துடன்- கிழக்கிலுள்ள விடுதலைப்புலிகளினதும் விசேட அதிரடிப் படையினதும் உயர் அதிகாரிகள் தமக்கிடையே நேரடித்தகவல் தொடர்பை பேணிக்கொள்ளவும்,

கிழக்கில் வாழும் சிங்கள சமூகத்தின் நலன்களில் அக்கறை செலுத்தவும், மக்கள் மட்டங்களில் அமைதிக் குழுக்களை அமைத்து இனங்களுக்கிடையேயான நல்லுறவைப் பாதுகாக்கவும் நேற்றைய சந்திப்பில் இணக்கம் ஏற்பட்டது.

# தீபாவளியை யொட்டி நாளையும் வீதி திறந்திருக்கும்

(வவுனியா)

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமையும் ஓமந்தை, முகமாலையூடான பயணிகள் போக்குவரத்து நடைபெறவுள்ளது. காலை 7 மணி முதல் மாலை 5.30 மணி வரை போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவிருக்கிறது.

### நீதிமன்றத்தின்...

யிட முடியாது. நீதிமன்றத்தின் தன்னிச்சையான - சுதந்திரமான தீர்ப்பு -அரசின் நிலைப்பாடாக கருத முடியாது என அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் மேலும் குறிப்பிட்டார்.

### அரச படுகொலைக்கு...

சமாதானத்துக்கு ஆப்பு வைப்பது போன்ற இத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் தவிர்த்துக் கொள்ள முனைய வேண்டும். அதில் கவனம் எடுக்க வேண்டும். தற்போதய நீதிமன்றத் தீர்ப்புப் போல் அரசாங்கம் யுத்தகாலத்தில் செய்த படுகொலைகளை விசாரித்தால் நாங்கள் 2000 ஆண்டுகள் தீர்ப்பளிக்க வேண்டிவரும் என்றும் அவர் கூறினார்.

## நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.4 | 96.59 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 150.2 | 151.39 |
| 1 யூரோ | 94.75 | 95.65 |
| 1 சுவிஸ் பிராங் | 64.78 | 65.63 |
| 1 அவுஸ்ரேலிய டொலர் | 53.02 | 53.86 |
| 1 ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1 சவூதி றியால் | 24.71 | 24.71 |

பாடகர், பாடகிகளுக்கான போட்டி

DMN

(வயதெல்லை கிடையாது)

பாட்டுப்போட்டியில் முதலாம் இடத்தை பெறுபவர், சுவிஸ்சலாந்தில் நடைபெற இருக்கும் மிலேனியம் விருது விழாவில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தினை பெறுவார். பங்கு பற்ற விரும்பும் அனைவரும் 05-11-2002க்கு முன் உங்கள் விபரங்களை 0777-731815 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுசெய்து கொள்ளவும்.

Digital Media Net Work

தீபாவளி சிறப்புத் தள்ளுபடி

எரிக் கணேஸ்

- இலவசமாக கண்களை பரிசோதித்து கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ள
- சொந்தப் பற்களுக்கு நிகரான சங்குப் பற்களை கட்டிக்கொள்ள
- மிதப்புப் பற்களுக்கு கிளிப் போட்டுக் கொள்ள

எரிக் கணேஸ்

566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: கொக்குவில். சுன்னாகம்.

(சி-115)

இப்பத்திரிகை- இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 02.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.